# திராவிடநாடு

மலர் 9 | 19—11—50 | இதழ் 22

இலங்கை 25 சதம்] [விலை அணா மூன்று



மாணவர் மாநாட்டின் உட்புறக் காட்சி.

# வெறிப் பாதை விசித்திரம்!

# வெந்தபுண்ணிலே வேல்!

எதேச்சாதிகார வெறிப் பாதையில் அகிம்சா மூர்த்திகள் புகுந்துவிட்டனர். மனிதாபிமானமின்றி எட்டுமுறை சுட்டுப் பொசுக்கியது போதாதென்று, 27 தோழர்களைப் பிடித்து, அவர்கள்மீது வழக்கும் தொடர்ந்துள்ளனர். கலவரத்தை மனதிலும் நினையாத கழக வீரர்கள் மீது கலவரம் உண்டாக்கியதாகக் குற்றச்சாட்டாம்!

அதிகாரவெறி, காங்கிரஸ் ஆட்சியை, கொடுங்கோலர்களாக்குகிறது. கண்மண்தெரியாமல் கூத்தாடுகின்றனர். அழிவுப்பாதை—நெருங்குகிறது! நெருங்கிக் கொண்டேயிருக்கிறது!! அதன் 'அத்தியாயம்' குன்றத்தூரில் துவக்கப்பட்டு நாள் தோறும் வளர்ந்துகொண்டேயிருக்கிறது. காங்கிரஸ் ஆட்சியைப்போல கொடுமைகளால் கூத்தாடிய சாம்ராஜ்யாதிபதிகள் எல்லாம் சரிந்து ஒழிந்திருக்கின்றனர்! அந்தச் சரித்திரச் சித்திரத்தை மறந்து சதிராடுகின்றனர், இங்கே, இவர்கள் !!

வெந்த புண்ணிலே வேலைப் பாய்ச்சுகின்றனர்! குன்றத்தூரில் எட்டுமுறை சுட்டுப் பொசுக்கியதோடு 'எதேச்சாதிகார வெறி' அடங்கிவிடவில்லை இந்த 'அகிம்சா மூர்த்திகளுக்கு.' நமது கழக வீரர்கள் பலரைக் கைது செய்து, அவர்கள்மீது இல்லாத குற்றச்சாட்டுகளையெல்லாம் சுமத்த முயன்று வருகிறது அதிகார ஆதிபத்யம்.

பேச்சுரிமை நிலைநாட்டச் சென்ற வீரர்கள் மீது—'கலவரம் செய்யத் தூண்டினர்' என்ற குற்றச் சாட்டாம்!

வேதனை நிரம்பிய வேடிக்கை! உண்மைக்குத் திரை போடும் உளுத்துப்போன முறை! எதேச்சாதிகாரிகளெல்லாம் சென்று, வீழ்ந்து ஒழிந்த பாதை! அதிலேயே இந்த 'வீரப்பிரதாபி'கள் வெகு வேகமாக முன்னேறிக் கொண்டுள்ளனர்!

குன்றத்தூர் கொடுமையின் 'போது தடியடி தர்பார்க்காளாகி மண்டையில் படுகாயமடைந்த காஞ்சி டி. சபாபதி, குன்றத்தூர் தி.மு.க. செயலாளர் தோழர் டி. எம். நடராசன், பக்கிரிசாமி ஆகியோர் மீது வழக்கு தொடரப்பட்டு, 7—11—50 அன்று சென்னை — சைதாப்பேட்டை சப் டிவிஷனல் மாஜிட்டிரேட் கோர்ட்டில் விசாரிக்கப்படுமென அறிவிக்கப் பட்டிருந்தது.

அன்று, மேற்படி தோழர்கள் மூவரும் கோர்ட்டிற்கு வந்திருந்தனர்.

எந்த விதமான விசாரணையும் நடத்தப்படாமலேயே மேற்படி வழக்கு 14—11—50க்கு ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப் பட்டது

## 14—11—50

முன்பு அறிவிக்கப்பட்டபடி 14—11—50 அன்று சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் குன்றத்தூர் பேச்சுரிமைப் போர் சம்பந்தமான வழக்கு விசாரிக்கப்படுமென அறிவித்ததற்கிணங்க, கைது செய்யப்பட்ட தோழர்களில் பதினெட்டு பேரும் கோர்ட்டில் ஆஜராகியிருந்தனர்.

சைதாப்பேட்டை சிறையில் வைக்கப்பட்டிருந்த 'திராவிடன்' ஆசிரியரும், மத்திய கழகப் பிரச்சாரக் குழு செயலாளருமான தோழர் என். வி. நடராசன், குன்றத்தூர் பாலசுந்தரம் ஆகியோர், கைகளில் விலங்கிடப்பட்டு கோர்ட்டுக்கு கொண்டுவரப்பட்டிருந்தனர்.

வழக்குக் குறித்து எவ்வித விசாரணையும் துவக்கப்படவில்லை. வழக்கு 24—11—50 ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

கோர்ட்டுக்கு ஏராளமான கழகத் தோழர்கள் வந்திருந்தனர். கழகத் தோழர்கள் சார்பில் நடவடிக்கைகளைக் கவனிப்பதற்காக சென்னை வக்கீல் தோழர் அனந்தராமன் வந்திருந்தார். டாக்டர் கணேசன், கண்ணபிரான், பாண்டியன், ரத்தினம், கண்ணன், காஞ்சி. ஆர். கே. மூர்த்தி முதலாய பல இயக்கத் தோழர்களும் வந்திருந்தனர்.

## 27-பேர்மீது

குன்றத்தூர் பேச்சுரிமைப் போர் சம்பந்தமானவழக்கில் மொத்தம் 27 தோழர்கள்மீது வழக்குத்தொடரப் பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இவர்களில் ஐந்து தோழர்கள் சென்னை மத்தியசிறையில் கொண்டு போய்ப் பூட்டப்பட்டுள்ளனர், குண்டடிபட்டு, குருதி கீழே கொட்ட, குற்றுயிராகச் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் கொண்டு போய் போடப்பட்டு, படுக்கையில் கிடக்கும் இருதோழர்கள்மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறதாம்!

—✻—

# எதேச்சாதிகார ஆணவத் தர்பார்

# கழக வீரர் கைகளிலே விலங்கு

## சுயராஜ்யத்தின் 'திமிர்'ப் போக்கு!

தோழர் என். வி. நடராசன், விடுதலைப் படையின் முன்னணி வீரர்! எதுவரினும் இதயங் கலங்கா சூரர்! பொறுப்பானவர்! 'திராவிடன்' பத்திரிகையின் ஆசிரியர்! திராவிட முன்னேற்றக்கழக அமைப்புக் குழுவின் செயலாளர்! நாட்டு மக்களின் இதயத்தைத்தன் தொண்டால் கவர்ந்தவர்! அவர் கைகளிலே விலங்கிட்டு வீதிவழியே அழைத்து வந்தனராம். அவரையும் குன்றத்தூர் தோழர் பாலசுந்தரத்தையும் 14—11-50 அன்று சப்டிவிஷனல் மாஜிஸ்ரேட் கோர்ட்டுக்கு, இருவர் கைகளிலும் விலங்கு பூட்டி, வீதி வழியே கொண்டு சென்றனராம்! கேட்கும்போதே, நெஞ்சம் கொதிக்கிறது. இலட்சிய வீரர்கள் கைகளிலே விலங்கு! இரும்புச்சங்கிலி!!

வெள்ளையர் பிடித்தாட்டிய எதேச்சாதிகார ஆட்சியுங்கூட இப்படி நடந்ததில்லை. ஆனால், இவர்கள் நடக்கிறார்கள்! கண்ணியத்தை மறந்து திரிகிறார்கள்!!

காங்கிரஸ் சர்க்கார், நம் கைகளிலே விலங்கைப் பூட்டுகிறது! விவேகிகள் நாணக்கூடிய செயல் — ஆனாலும் 'நம்மைக்கேட்க யாரிருக்கிறார்கள்' என்ற திமிரோடு செய்கின்றனர்! பரவாயில்லை — எதையும் தாங்கும் இதயம் நமக்குண்டு!



அடக்குமுறை வெறியால் துன்னித்திரியும் அகிம்சா மூர்த்திகள் என்றும் இருக்கப்போகும் நிரந்தர பீடமல்ல அதிகாரம் — 'நடுத்தெரு நாராயணர்கள்' ஆகும்காலம் நெருங்கிக்கொண்டேயிருக்கிறது. எதேச்சாதிகாரம் நீடிக்காது — ஒழியும். ஒழிந்தேதான் தீரும்!



சென்னையிலே நடைபெற்ற திராவிட மாணவர் முன்னேற்றக்கழக மாநாடு — நமதியக்க வளர்ச்சியின் ஒரு வெற்றிக் கட்டம்.

மாணவர் மாநாடு நடைபெற்ற மண்டபத்துக்கு வெளியே தேங்கிக் கிடந்த மக்கள் கூட்டம்—நடு. நண்பகல். கொளுத்தும் வெயில். எனினும் கருத்து ஒலி கேட்டுப் பரவசத்தோடு நிற்கின்றனர் மக்கள்!

## குன்றத்தூரில்!

கடந்த 1—11—50 அன்று நள்ளிரவில் குன்றத்தூர் தி. மு. க. செயலாளர் தோழர் டி. எம். நடராசனை போலீஸ் அதிகாரிகள், 14-போலீஸ் கான்ஸ்டேபிள்களுடன் சென்று கைது செய்தனர்.

# மாணவ மந்திரி சபை அமைப்போம்!

## மாணவப் பருவம்—ஒரு பாலைவனச் சோலை

## மக்களை மதியாத சர்க்காரை நாம் மதியோம்

### மாநாட்டுத் தலைவர் சத்தியேந்திரன் பேருரை

சென்னையில், மிக வெற்றிகரமாக நடந்த திராவிட மாணவ முன்னேற்றக் கழக மாகாண முதல் மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய தோழர் இரா. சத்தியேந்திரன், பி. ஏ., பி. எல். அவர்கள் ஆற்றிய சொற்பொழிவில், மாணவ இயக்கம் வளர்ந்த வரலாற்றைப் பற்றியும், இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலையில் மாணவர்கள் கடமை குறித்தும், எதிர்கால வேலைத் திட்டம் குறித்தும் பல நல்ல கருத்துகளைக் கூறினர்.

மாநாட்டுத் தலைமையுரையின் முக்கிய பகுதிகளின் சுருக்கம் கீழே :—

"நான் இன்று வெள்ளம் போன்ற இந்த மாணவர் கூட்டத்தையும், அதற்குக் கரை அமைத்திருப்பதைப் போன்று நம் கழகத் தோழர்கள் கூடி இருப்பதையும் அங்கே தென்றலும், புயலும் வீசுவதைப்போல நமது அருமை அண்ணா அவர்களும், மற்ற பிற அறிஞர்களும் கருத்துரையாற்றுவதையும் காணும் போது நான் கண்ட கனவையே காண்பதாக இருக்கிறது.

இன்று—நேற்றல்ல தோழர்களே, ஒரு எட்டு—பத்து ஆண்டுகளுக்கு முன்னே நான் பள்ளியைத் தாண்டி கல்லூரி மாணவனாகஇருந்தபோது கண்ட இன்பக் கனவை இன்று என் கண்முன்னே காண்கிறேன். அன்று மாணவத் தோழர்களின் எதிர்ப்பிற்கிடையே நாங்கள் பட்ட பாட்டிற்கு இது போன்ற இன்பக் கனவுகள் தான் பரிசுகளாக இருந்தன. மாணவத் தோழர்களெல்லாம் மனம் திருந்தி பகுத்தறிவுப் பாதையிலே முன்னேறுவதாக அன்று நான் கண்ட கனவை இன்று என் கண்முன்னே காண்கிறபோது புத்துணர்வும், பெருமகிழ்வும் கொள்கிறேன்.

அன்று கல்லூரிகளிலே விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிற்கு ஒரு சிலர்தான் பகுத்தறிவு இயக்க மாணவர்கள் இருப்போம். கும்பகோணத்திலே தவமணிராசன்; அண்ணாமலையிலே அன்பழகன், நெடுஞ்செழியன், மதியழகன், பச்சையப்பனிலே சம்பத், ஜனார்த்தனம் நான் படித்த கல்லூரியிலே அருணாசலம், தங்கராஜ், ராஜகோபாலன் இப்படி ஒரு சிலர் இருந்துகொண்டுதான் காடு களைந்தோம்! அப்போதெல்லாம் கல்லூரிகளிலே கதர்ச்சட்டையினருக்குத்தான் செல்வாக்கு அதிகம்! அவர்கள் சாதாரணமாகவே எங்களை வெறித்துத்தான் பார்ப்பார்கள். நாங்கள் ஏதாவது சொல்லி விட்டாலோ முறைப்பார்கள்—விறைப்பார்கள்—மிரட்டுவார்கள்.

என் கல்லூரியிலே நிகழ்ந்ததோர் நிகழ்ச்சியை இங்கு கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நான் கல்லூரியினுள் நுழைந்ததும்—மாணவ விடுதியிலே ஒரு அறை கிடைத்தது. அங்கிருந்த ஒரு மேஜையின்மீது நம் பெரியார் இராமசாமியின் உருவப் படத்தைத்தான் முதன் முதலில் கொண்டுபோய் வைத்தேன். ஏதோ மிகவும் கேவலமான செயலை நான் செய்துவிட்டதாக மற்ற மாணவ சகாக்கள் ஏளனப்பார்வை காட்டினர். இப்படி இந்தப் படத்தை வைத்ததின் மூலம் விடுதியின் பெருமைக்கே இழுக்கு இழைத்துவிட்டதாகக்கூட அவர்களில் சிலர் எண்ணினர். ஒரு மாணவத் தோழர் ஒரு நாள் துணிந்து என்னிடம் வந்தார். "படித்தவன்—ஒரு கல்லூரி மாணவன் இப்படி ஒரு செயலை செய்து விட்டது எனக்கு பெரிய ஆச்சரியமாக இருக்கிறது" என்று சொல்லிவிட்டு பதில் ஒன்றையும் எதிர்பாராமலே போய்விட்டார், அவரைமற்றும் ஒருமுறை தனித்துச் சந்திக்கக் காத்திருந்தேன் — அகப்பட்டார் —அழைத்தேன். வந்தார். "உங்களுக்கு தாய் இருக்கிறார்களல்லவா" என்றுமெதுவாக ஆரம்பித்தேன் "ஆம்" என்றார் அலட்சியமாக. "தமக்கை?" உண்டென்றார் "தங்கை?" "இருக்கிறாள் ஒரு சிறுமி" என்றார். "என்னை தயவுசெய்து மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று மன்றாடினேன். அவருக்கு ஒன்றும் விளங்கவில்லை. "தயவுசெய்து கோபித்துக் கொள்ளக்கூடாது" என்று கெஞ்சினேன் "சரி சொல்லுங்கள்" என்று சிரித்தார்.

"நண்பரே உங்கள் தாய், தமக்கை, தங்கை இவர்களை நான் விபசாரிகள் என்று சொன்னால் என்ன செய்யமாட்டீர்கள்?" என்று கேட்டேன். அவர் முகம் கறுத்தது, கண்கள் கனல் கக்கின. "இப்படித்தான் தோழரே உங்களையும் என்னையும் விபசாரி மகன் என்றெழுதி வைத்திருக்கிறான் ஆரியன்" என்றேன். சொன்னேன். அவருக்கு சூத்திரன் என்ற சொல்லுக்கு ஆரியன் தந்திருக்



கும் பொருளை. சாஸ்திரத்தில்—புராண இதிகாசத்தில்—இன்று சட்டத்தில் நாட்டில் நாம் ஆரியர்களால் யாராக விளக்கப்பட்டிருக்கிறோம் என்பதை அவருக்கு விளக்கி அந்த எட்டுக் குப்பையைப் பொசுக்க வேண்டாமா என்று கேட்டேன். நம்மை சூத்திரன்—விபசாரி மகன் என்று அழைப்பவனை ஆரி என்று சொல்லுகிற ஒருவருடைய படத்தை—அந்த ஏட்டு ஆதாரங்களைக் கொளுத்து என்று சொல்லுகிற பெரியாருடைய படத்தை நான் இங்கே வைத்திருப்பது தவறு—இழிவு என்று எண்ணுகிறீர்களா? என்று கேட்டேன். அவர் பதில் ஒன்றும் சொல்லவில்லை பேசாமல் போய்விட்டார். கல்லூரியிலே மேலும் ஓராண்டு இருந்தார்; ஆனால் என்னிடம் ஒரு வார்த்தைகூட பேசிக்கொண்டதில்லை. பிறகு தூத்துக்குடி மாநாட்டிலே சந்தித்தேன். என்னை அவர் கேட்டார், "என்ன சத்தியேந்திரன் பழைய வேகத்தையே இப்பொழுது காணோமே" என்று —அந்த அளவிற்கு வேகம் உள்ளவராக அவர் ஆகி இருந்திருக்கிறார்.

இந்த மாநாடு மாணவர் உலக வரலாற்றில் மட்டுமல்ல, நாட்டின் சரித்திரத்திலேயே மிகவும் முக்கியமானது. இதன் தீர்மானங்களையும், முடிவுகளையும், இந்த சர்க்கார் பொருட்படுத்தத் தயங்குமேயானால், மக்களும் இந்த சர்க்காரை பொருட்படுத்தத் தயங்குவார்கள் என்பது மட்டுமல்ல, பொருட்படுத்தவே மாட்டார்கள். நாம் மாநாடு கூட்டி இருக்கிற நேரம்—தடியடி பட்டு வேதனை தணியாத நேரம். துப்பாக்கிப் பிரயோகத்தால் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிற சமயம். மந்திரி மாதவ மேனன் நம் இயக்கத்தை நசுக்க டெல்லியிலே பட்டேலுடன் கூடி சதி செய்கிற வேளை. நாமெல்லாம் மாணவர்களாக உலவ—மக்களாக வாழ நமக்கு சர். பி. தியாகராயர் எழுதிவைத்துப் போன உயிலை—வகுப்பு நீதியை செல்லாதென்று கூறி நாட்டிலே நம்மையும் செல்லாக் காசுகளாக துருப்பிடிக்கவிட இருக்கும் துர்பாக்கிய சந்தர்ப்பம், மந்திரிகளும் மற்றவர்களும் போகிற இடங்களிலே போர்பிரகடனம்—இல்லை ஒப்பாரி செய்துகொண்டிருக்கும் நேரம். இந்த நேரத்திலே நாம் கூடுகிறோம்.

மாணவர் உலகத்திலே முன்பு நமக்கிருந்த எதிர்ப்புகளெல்லாம் மறைந்து மாணவத் தோழர்களெல்லாம் நம் அணி வகுப்பிலே இருப்பதைக் காண்கிறேன். ஆனால், எதிர்ப்பு இடம் மாறி இருக்கிறது—மறையவில்லை. ஆளவந்தார்கள் உருவிலே—அவர் தம் போலீஸார் உருவிலே—துப்பாக்கி, தடிக்கம்புகள் உருவிலே பேரெதிர்ப்புகளை இன்று எதிர்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்த எதிர்ப்பு பயங்கரமானதுதான்—ஆனால் பயப்பட வேண்டாதது! ஒரு அணியிலே அடக்குமுறையும், மற்ற அணியிலே அறிவும் நின்றால் அடக்குமுறை பணிந்துதான் தீரும் என்பது சரிதம் கூறும் அசைக்க முடியாத உண்மை.

இந்த இரண்டு மாறுபடும் அணிவரிசைகள் ஏற்பட்டு விட்ட காரணத்தால், நாம் அடைய வேண்டிய வெற்றிபுரி அதிக தொலைவில் இல்லை என்ற தவிர்க்க முடியாத முடிவில் உள்ளவனாய் இருக்கிறேன். இன்னும் சில பல துப்பாக்கிப் பிரயோக தொலைவிலே—சில பல தடியடி பிரயோகங்களைத் தாண்டியதும் நம் இன்பபுரி வந்துவிடும் என்பதை எண்ணும்போது நான் பெருமித மடைகிறேன்.

மாணவத் தோழர்களுக்கு அடிக்கடி, சில ஊருக்கு உபதேசிகள் வந்து அரசியலிலே கலந்து கொள்ளக்கூடாதென்று கூறுவார்கள். அவர்களுக்குமட்டுமா? உலகத்திலுள்ள எல்லாருக்குமேதான் கூறுகிறார்கள். பள்ளிப் பருவத்திலே, 'அரசியலைப் பின்னர் பார்த்துக்கொள்ளலாமப்பா' என்பார்கள். கல்லூரிக்குப் போனால் சுதந்திரம் உண்டு, அரசியலிலே கருத்துச் செலுத்திக் கொள்ளலாமென்பார்கள். நாம் கல்லூரிக்குப் போனதும் 'படிப்பைக் கெடுத்துக்கொள்ளாதே' படிப்பை ஒருவாறாக முடித்துவிட்டு நீ எப்படி இருந்தாலும் உன்னை ஏன் என்று யார் கேட்கப் போகிறார்கள். இப்பொழுது படிப்பு ஒன்றுதானப்பா உன்னுடைய குறிக்கோள், என்று உபதேசிப்பார்கள் கல்லூரியினின்றும் வெளியே போனதும் 'ஏதாவது ஒரு வேலையை வெட்டியைத் தேடிக்கொண்டு, வயிற்றுப் பிழைப்பிற்கு வழி பார்த்துக்கொண்டு பிறகு எப்படிவேண்டுமானாலும் இரேன் உன்னை யார் கேட்கப்போகிறார்கள்' என்று கூறுவார்கள். வேலை கிடைத்ததா, வேலை கொடுத்தவன் பாய்வான்! வீட்டிலே திருமணத்தைக் திணிப்பார்கள்! பிறகு சொல்லுவார்கள் 'ஒரு குடும்பமாகி, நாலுபிள்ளையும் குட்டியுமாக ஆகிவிட்டால், பிறகு என்னசெய்வது? இப்போது அரசியல், அரசியல் என்று அடித்துக்கொள்ளலாமா ஏதாவது சொத்துபத்து சேர்த்துவைத்துவிட்டு நீ எப்படி வேண்டுமானாலும் இரேன். உன்னை யார் என்ன சொல்லமுடியும்?' என்பார்கள். அப்படியே 'சொத்துபத்து' சேர்த்தாலும் 'எல்லாம் 'ரிட்டையர்டு' ஆனபிறகு வைத்துக் கொள்ளலாம்' என்று புத்திமதி சொல்லுவார்கள் 'ரிட்டையர்டு' ஆகிவிட்டாலோ 'ரெஸ்ட்டு' எடுக்க

### திராவிட மாணவ முன்னேற்றக் கழகம்

#### குடந்தை

குடந்தை திராவிட மாணவமணிகள் அனைவரும் கூடினர் 13-10-50ல் கல்லூரிக் கெதிரிலுள்ள வேப்ப மரத்தடியில். தி.மா.மு. கழகத்தின் பொதுக்குழு கூட்டத்திற்கு தோழர் இளவழகன் முன்மொழிய தோழர் இலக்குவன் வழிமொழிய தோழர் தி க. சுப்பிரமணியன் தலைமை வகித்தார்.

பிறகு இவ்வாண்டு நடவடிக்கைகளை நல்ல முறையில் நடத்தித்தர புதிய செயற்குழு தெரிந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:- வீரா. இராசகோபாலன், துணைச் செயலாளர்:- இளவழகன், பொருள் உறுப்பினர்கள்:- இராதா-இலக்குவன், தியாக. மதியழகன், வி. உறுப்பினர்கள்:- வீ அழகையன், ஆ. சு. இராமலிங்கம், ம துரைசாமி.

சேலம் கல்லூரித் தலைவர் ஏ. இராமசாமி, தமிழ்க் கடல் மறைமலையடிகள் ஆகியோர் மறைவிற்கு வருந்தியும், 24—10—50ல் கழக ஆண்டு நிறைவு விழா நடத்த அனுமதி தர மறுத்த அரசியலாரைக் கண்டித்தும், இதனை மத்திய கழகத்தாருக்கு அறிவித்து, அவர்கள் தரும் அறிவுரைப்படி நடப்பது எனவும், உறுப்பினர் கட்டணம் மாதம் நான்கணா என்றும் நன்கொடை வசூலிப்பதெனவும், கூட்டங்கள் நடத்த செயலாளருக்கு அனுமதி தந்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வேண்டிய காலத்தில் 'பாலிடிக்ஸ்' எதற்கு?' என்பார்கள். 'அதெல்லாம் 'பங்ஜெனரேஷன்ஸ்'க்கு 'ஹாட்பிளட்'க்கு விட்டுவிடவேண்டு'மென்பார்கள், நலலவேலை செத்தற்கு அப்புறம் அரசியலில் ஈடுபடலாம் என்று ஓத்திப்போடாமல் இருக்கிறார்களே!

ஆக, தோழர்களே! அரசியலிலே ஈடுபடாதே என்பது இந்த நாட்டினுடைய பரம்பரை மனப்போக்கு. இராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன என்று இன்றும் சொல்லிக்கொண்டிருக்கிற நாடு இது. மக்களுடைய எந்தப் பருவத்தைக் காட்டிலும் மாணவப் பருவம் ஒன்றுதான் அரசியலைப் பற்றி சிந்திக்க — கருத்துக் கொள்ள தகுதியும், உரிமையும் உள்ளதாகும். உலகச் சரித்திரம் படிக்கிறவர்கள் — அரசியல் அறிகிறவர்கள் — அறிவு பெறுவதற்காகவே கல்லூரியிலிருக்கிறவர்கள். அரசியலைப் பற்றி சிந்திக்க இவர்களுக்கு இல்லாத உரிமை வேறு எவர்களுக்கிருக்கிறது? மாணவர் உலகம் இருக்கிறதே அது அப்பழுக்கற்றது. அவர்களுக்கிடையிலே தீண்டாமை கிடையாது, சுரண்டல் கிடையாது, அரசியல் சூதாட்டங்கள் — பொருளாதாரக் கொள்ளைகள் — சமூகக் கொடுமைகள் ஒன்றும் கிடையாது. வெளி உலக சழக்கத்தனங்கள் அவர்களை அண்டுவதில்லை. மாணவர் உலகு ஒரு இன்பபுரி! சுற்றிலும் துன்பக் காடு! பாலைவனத்தின் நடுவிலே ஒரு 'ஓயஸிஸ்'! முதலாளித்துவ நாடுகளுக்கிடையே ஒரு ரஷ்யா, செஞ்சீனு! ஆனால், இந்த இன்பபுரி வாசிகள் இன்பபுரியோடு நின்று விடுபவர்களல்ல — இன்பபுரிக்கே எப்பொழுதும் உரித்தானவர்களுமல்ல! நேற்று துன்பக்காட்டிலிருந்து வந்தவர்கள்தான்! நாளை அதனுள் நுழையப் போகிறவர்கள்தான்! நேற்று பாலைவனத்தில் நடந்து வந்தவர்கள்தான்—நாளை பாலைவனத்தில் நுழையப் போகிறவர்கள்தான். எனவே, இரண்டையும் அவர்கள் தெரிந்து கொள்ளும் உரிமை உள்ளவர்கள். அவர்கள் படிக்கும் சரித்திரம், விஞ்ஞானம் எப்படி உலகத்தையே இன்பபுரியாக மாற்றுவது என்பதற்கு உறுதுணையாக இருக்கும்போது அவர்களைத் தவிர அரசியலைப் பற்றி சிந்திக்க—அதிலே கருத்தைச் செலுத்த வேறு யாருக்கு தகுதி இருக்கிறதென்று கேட்க அவாவுகிறேன்.

தோழர்களே! வேண்டுமானால் சர்க்கார் இந்த சவாலை ஏற்கட்டும்! இன்றே இந்த மந்திரி சபையைக் கலைத்து விடட்டும்! மாணவர்கள் கையிலே ஓராண்டிற்குக் கொடுக்கட்டும் அரசாங்கத்தை. ஒரு பச்சையப்பன் கல்லூரி மாணவரைப் பிரதமராக்குவோம், சுகாதார இலாகாவை ஒரு மருத்துவக் கல்லூரி மாணவரிடம் ஒப்புவிப்போம், ஒரு இஞ்சினீரிங் கல்லூரி மாணவர் மராமத்து இலாகா மந்திரியாக இருக்கட்டும், கல்வி இலாகாவை ஒரு லேடி வில்லிங்டன் மாணவத் தோழியரிடம் கொடுப்போம், க்யூ. எம். ஸி. மாணவத் தோழி விளம்பர மந்திரியாக இருக்கட்டும். இப்படியே மாணவர்களைக் கொண்டு ஒரு மாணவ 'கேபினெட்' அமைத்தால் இன்றைய மந்திரி சபையைக் காட்டிலும் எந்தவிதத்திலும் குறைந்தது இது என்று சொல்லிவிட முடியுமா? இன்றைய சர்க்காரிலிருக்கும் ஊழல், லஞ்சத் திருவிளையாடல் நம் மாணவ சர்க்காரிலே இருக்குமா? தைரியமிருந்தால் இந்த சவாலை மந்திரிகள் ஏற்கட்டும். இன்னுங்கூட பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மாணவர்கள் நடத்துகின்ற போலி பாராளு மன்றங்களில் (Mock Parliament) நிலவும் ஒழுக்கம், தெளிவு, தீர்க்கம், நேர்மை இந்த ஆழ்வாராதிகள் நடத்துகின்ற அசெம்பிளிகளிலாவது காண முடிகிறதா?

மாணவர்களை இவர்கள், அரசியலிலே இழுத்துவிட்டு ஆபத்துக்களிலே மாட்டி விடுவார்களென்று நீங்கள் அஞ்சவேண்டியதில்லை. நமக்குக் கிடைத்திருக்கிற தலைவர் எந்த இயக்கத்திற்கும், எந்தக் காலத்திலும் கிடைத்தற்கரிய தலை சிறந்த வழிகாட்டியாவார். நம் அறிஞர் அண்ணா அவர்களை நாம் தலைவராகப் பெற்றிருப்பது நாமும் நம் நாடும் பெறற்கரிய பேறேயாகும். நம் இட்சியத்திலே இறுகிய பற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்."

*

**19-11-50ல் செங்கற்பட்டில்**

சிறைசென்று மீண்ட க. ப. அழகரசுக்கு

**பாராட்டு**

**சி. என். அண்ணாதுரை**

பேசுவார்.

தி. மா. மு. க.

# அடக்குமுறை நெடுநாள் நீடிக்காது

## 'சோட்டா இட்லரின்' மட்டரகப் போக்கு

## வடநாட்டுத் தலைமை வேண்டாம்

### பாலசுப்பிரமணியம் வீரவுரை

சென்னையில் நடந்த மாணவர் மாநாட்டில் 'சண்டே அப்சர்வர்' ஆசிரியர், தோழர் பீ. பாலசுப்பிரமணியம் அவர்கள் ஆங்கிலத்திலே சொற்பொழிவாற்றினர்.

அவர், தமது பேச்சின் மூலம் திராவிடஸ்தான் அடைவது குறித்தும், அதற்கு காங்கிரசார் தரும் மறுப்புகளை விளக்கியும், மறுப்புகளுக்கேற்ற மாற்றங்களை தெளிவாக்கியும் அரிய கருத்துகளை அள்ளி வழங்கினர்.

அவர் பேச்சின் முக்கிய பகுதிகளை இங்கு சுருக்கித் தருகிறோம்.

"நான் இந்த மாணவர் கழக மாநாட்டில் பங்கு கொள்வதில் பெருமையடைகிறேன். பூரிப்படைகிறேன். நீங்கள் எல்லாம் திராவிடர் இயக்க எண்ணங்களை ஏற்று, வாலிபர் தலைவர் சி என். அண்ணாதுரை தலைமையில் கூடியிருக்கும் காட்சியைக்காண மகிழ்ச்சியடைகிறேன்.

திராவிட மாணவர்கள் அன்றாட அரசியல் மாறுதல்களை தெரிந்துகொள்ளவேண்டும். நம்நாடு அரசியல் துறையில் முன்னேற்றமடைய எல்லா வகையான முயற்சிகளையும் மாணவர்கள் செய்ய வேண்டும்.

கொடுங்கோன்மை எங்கிருந்தாலும், எந்த உருவில் வந்தாலும் ஒழித்துக்கட்ட மாணவர்கள் பின்வாங்கக்கூடாது. ஆகவே மாணவர்கள் எல்லாம் திராவிட இயக்கத்திலே பங்கு கொள்ள வேண்டும்.

இந்த நாட்டை ஆளும் ஆளவந்தார் கையாள்கிற அரசியல்முறை மிகவும் வருந்தத்தக்கது— கண்டிக்கத்தக்கது. அடக்குமுறைக் கொள்கை அதிகநாள் நீடிக்காது. கொடுங்கோன்மை அழிவின் அடையாளம். இந்த காங்கிரசாட்சியாளர் முதலில் பொதுவுடைமை வாதிகளை அடக்க இத்தக்கடுமையான அடக்குமுறைகளைக் கையாண்டார்கள். இன்றோ திராவிட இயக்கத்தின்மீது திருப்பிவிடுகிறார்கள்.

'சோட்டா இட்லர்' காமராஜநாடார், திராவிட இயக்கத்தார் இங்கு கலவரத்தையும், குழப்பத்தையும் உண்டாக்க துவேஷப்பிரசாரம் நடத்துகிறார்கள் என்று கூறுகிறார். 'இந்து' பத்திரிகையிலே எழுதிய நண்பர் திராவிட இயக்கத்தவரையெல்லாம் அலகாபாத் சிறையிலே போட்டு கோதுமைக்கூழ சாப்பிடவைத்து, வடநாட்டு உடைகளை அணியச்செய்து,இந்தியைபேசவைத்து இவர்களைத் திருந்தச்செய்யவேண்டும் என்கிறார். திராவிட இயக்கத்தார்—பெரியாரோ, சி. என். ஏவோ எந்தவித கலவரத்தைஉண்டாக்கும்படியானவேலைகளிலும் ஈடுபடவில்லை. ஆனால் இந்த காமராஜர்தான் இங்கு குண்டர்களை, ரௌடிகளைத் தயார் செய்கிறார்.

நாம் நம் இலட்சியத்தைநெருங்கிக்கொண்டே வருகிறோம் என்பதற்கான அடையாளங்கள் தெரிகின்றன. ஆந்திரம், கேரளம், கன்னடம், தமிழகம் ஆகிய நான்கு நாடுகளும், ஒரு கூட்டாட்சியில்வர வேண்டும் என்று பாடுபடுகிறோம் — முதலாளித்துவ அடிப்படையிலே அல்ல பொருளை பொதுவாக்கும் சோஷலிசமுறையிலே! பொதுவுடைமை என்றவுடனே காங்கிரசார் அஞ்சி நடுங்குகிறார்கள். ஏனோ தெரியவில்லை! பொதுவுடைமை, மனிதாபிமான தத்துவத்தின் முதற்படி—இதனைப்புரிந்து கொள்ளவேண்டும்.

திராவிடஸ்தான் அடையக்கூடியதா, இது ஒரு 'யுதியோபியா'வல்லவா என்று கேட்கிறார்கள். இதனைப் பெறுவதென்பது முடியக்கூடியகாரியந்தானா என்று சந்தேகம் கிளப்புகின்றனர். பக்தவத்சலம்போன்ற மந்திரிமார்களே பேசுகிறார்கள். ஏன் முடியாதென்பதுதான் நமக்குப் புரியவில்லை. சாதிமத பேதமில்லாத சமுதாயத்தை அமைத்து அதற்குரிய நாட்டைத் தனியாக்குவது எளிதான காரியமே! என்னைப்போன்றோர் திராவிடஸ்தான் அடைவதிலே எவ்வித சந்தேகமும் கொள்ள முடியவில்லை. ஏனெனில் இதுபோன்றே பாகிஸ்தான் அடைந்திருக்கிறதை நம்நாட்டிலே, நம்முடைய கண்களாலேயே பார்க்கிறோம்.

இந்த நாட்டுப்பார்ப்பனர்கள், யூதர்களைப் போலவே இருக்கிறார்கள், அவர்களுக்குரிய சில நல்ல தகுதிகள் இவர்களுக்கில்லாவிட்டாலும்! இவர்கள் சாதி, மத, மூடஎண்ணங்களை வளர்த்துவிட்டார்கள். எதிர்காலத்திலே ஏற்படப்போகிற திராவிடத்திலே சாதிமுறை இருக்காது, மதவழியின் மலிவைக்காணமுடியாது, விடுதலைவேகமிருக்கும், உரிமை புணர்ச்சி பாலிவிடும், சமத்துவசங்காதம் ஒலித்தபடியே இருக்கும்!

நாம் மனித அறத்தையே நிலைநாட்டவிரும்புகிறோம். ஆண்டவன் பெயரால் அக்கிரமங்கள் கூடாது. கடவுளிடம் அன்பு செலுத்த, உன் அருகில் வாழ்வோரிடமெல்லாம் கருணை காட்டு என்பதே நலமுறை. மதவெறி கூடாது.

இன்றோ போர்வாடை அடிக்கிறது. கொரியாவிலே, திபேத்திலே, நேபாளத்திலே, இந்தியாவின் எல்லை நாடுகளிலெல்லாம் சண்டை — இது பொதுவுடைமை நாட்டின் சுரண்டல் முறைக்கு செய்யப்படும் போர் என்று பேசப்படுகிறது, இதனை நிராகரிக்கவேண்டும்.

துன்பங்களை விரட்டிட வாதாடும் வழக்கறிஞர்களாக மாறவேண்டும் மாணவர்கள் என்று விரும்புகின்றேன். வடநாட்டுக் கடைகளில் பகிஷ்காரம் செய்யவேண்டும் என்றுகேட்டுக்கொள்ளும் அறப்போர் ஒரு அடையாளமறியல்! இதுவேமுடிவானதல்ல—அல்லது அப்படியே அவர்கள் வியாபாரத்தைத் தடுத்துக்கெடுத்து விடவேண்டுமென்பதாலுமல்ல!

அடுத்ததாக, அகதிகள் பிரச்சினையைப்பற்றிய என் கருத்தைச் சொல்லவிரும்புகிறேன். அகதிகளுக்குஎல்லா உதவிகளையும்நம்மால்முடிந்த அளவு செய்யலாம். நமக்கே குடியிருக்கக்கூட இடமில்லாத நிலை இருக்கும்பொழுது அவர்கள் தங்கவும் வசதியளிக்கத் தயங்கவில்லை. ஆனால் வந்தவர்கள் இங்கு வாழ்வோர்களாகவும், இந்நாட்டுக்குடையோர் தாழ்ந்துபோவோர்களாகவும் இருக்கக்கூடாது என்பதே என் எண்ணம். இந்தியாவில் சென்னைமாகாணம் மட்டுமில்லையே! இன்னும் எத்தனையோ மாகாணங்கள் உள்ளனவே அங்கெல்லாம்போய் வாழட்டுமே அவர்கள்!

நான் இன்னமும் மாணவனாக இருக்கவிரும்புகிறேன்—இருக்கிறேன். நான் ஒரு மாணவன் என்றமுறையில் இந்த நாட்டை, நாம் பிறந்த திராவிடத்தை நமதே ஆக்கி போராட உறுதிகொள்கிறேன். அதில் வடநாட்டு முதலாளித்துவ ஆதிக்கம் தலைநாட்டவிடமாட்டேன். வடநாட்டு அதிகாரத் தலைவர்கள் இங்கு வரவிடமாட்டேன். வந்தால் அவர்களை கருப்புக்கொடி காட்டி, நம் வெறுப்பைத் தெரிவித்து திரும்பிப்போகச் செய்வேன். அது என் உரிமை — சட்டவரம்பிற்குட்பட்ட செய்கை!

இன்று நாட்டில் வளர்ந்துவரும் உணவுப் பஞ்சம், உடைக்குறைவு மற்றைய பொருள்தட்டுப்பாடு, மக்கள் மனதிலே உருவாகிவரும் புரட்சியை விரைவுபடுத்துவன. ஆகவே, நாம் வாழ, நம் திராவிட இனம் உயர, நம் திராவிட நாட்டை அடைந்தே தீரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்."

—X—

சிறுவர்கள், வயதில் பெரியவர்களைப் பார்த்து, வளர்ந்தவர்கள் என்று குறிப்பிடுவது மிகவும் பொருத்தமானது. இருவருக்குமுள்ள வித்தியாசம் அது ஒன்றுதான்!

—பேரறிஞர் பெர்னுட்ஷா.

# திராவிட நாடு

ஞாயிறு] 19 -11—50 [காஞ்சி


# அன்பு மாலை

★

"மாயாவாதமும் மனமருட்சியும் நெருங்க நடுங்கும் நிலை அது! புராணமும் புல்லர் மொழியும் புகப் பயப்படும் அகம் அது! வெட்டிப் பேச்சைத் தட்டி நடக்கும் தீரர்கள், கைகொட்டி நகைத்து மட்டித் தனத்தை மட்டந்தட்டும் மாவீரர்கள், சுலோகங்களால் சுகவாழ்வு நடத்தும் சுயநலமிகளைச் "சுருட்டிக் கொள் உன் குடையை" என்றுரைக்கும் சூரர்கள். அடிமைத் தனம் இருத்தலைக் கண்டால் அவர்களின் விழி கனல் கக்கும், மொழி வீரத்தைப் பொழியும், உள்ளம் ஓராயிரம் எண்ணங்களை வெளியே தள்ளும், உணர்ச்சியின் உருவாகி விடுவர், உரிமை உரிமை என்று உரைப்பர், அந்த நடமாடும் எஃகுக் கம்பிகள், நாட்டு விடுதலைப் போருக்கேற்ற நல்லதம்பிகள்!"

1944! பிப்ரவரி மாதம் 19, 20 தேதிகளில் குடந்தையிலே திராவிட மாணவர்கள் முதல் முதலாகக் கூடியபோது, நமது அகமெல்லாம் மகிழ்ந்தது. புதுச்சுவை பெற்றவன்போலப் பூரித்துப் போனோம். புது நம்பிக்கையோடு தீட்டினோம், நாட்டு விடுதலைப் போருக்கு நல்லதோர் படை கிளம்பிவிட்டது என்று. அந்த நம்பிக்கையின் ஒளியை நாடும் மக்களும் இந்த ஆறு ஆண்டுகளில் கண்டுவிட்டனர். "தூங்கா விளக்குகள்! ஈட்டி முனைகள்! சுரங்க வெடிகள்! வீர விமானிகள்! முன்னணிப் படை!" என்று ஆர்வத்தோடு, அன்று நாம் இட்டழைத்த பெயர்களையெல்லாம் தலைகுனிய வைத்துவிட்டனர், திராவிட மாணவர்கள்!

'இந்தப் பெயர்கள் தானா, எமக்கு?' என்று கேட்பது போல, பெரும் பணி புரிந்து, நாட்டின் நடமாடும் பல்கலைக் கழகங்களாகிவிட்டனர்! திராவிட மாணவ உலகம்—பொறுப்பாளர் நிரம்பிய களஞ்சியமாக இன்று காட்சி தருகிறது. வாழ்ந்து வீழ்ந்த சமுதாயத்தை நிர்மாணிக்கும் முன்னேற்றப் படையின் முகாம், அது. வெற்றித் தூதர்களும், வீரத் தளபதிகளும், நல் வாழ்வின் வழிகாட்டிகளும் கிளம்பிக்கொண்டிருக்கும் புத்துலகப் பாசறை அது.

குடந்தைப் பாசறை, திராவிடமாணவ உலகு, குடத்து விளக்கல்ல என்பதைக் காட்டிற்று. திராவிட சமுதாய வரலாற்றிலே பொன்னான ஒரு அத்தியாயத்தை, சிருஷ்டித்தது.

அதன் வெற்றிப்பட்டியல், வீரகீதம், சென்னையிலே நடைபெற்ற திராவிட மாணவர் முன்னேற்றக்கழக மாநாட்டிலே பெருமிதமாகக் காட்சி தந்தது.

சென்னையிலே புது வீரர்களைக் கண்டோம்! வருங்காலச் சிற்பிகளின் புதுவரிசையைக் கண்டோம்! நமது இன்பத்திராவிடத்தின் எதிர்காலக் கோட்டைகளைக் கண்டோம்! புதுத் தளபதிகள், பலர், அங்கே தென்பட்டனர்! திராவிடசமுதாயத்துக்கான புதுவிடிவெள்ளிகள் அங்கேநடமாடினர்!

சென்னை மாணவர் மாநாடு — வளரும் திராவிடஇயக்கத்தின் வெற்றிக்கோர் எடுத்துக்காட்டு.

அங்கு நிறைவேற்றப்பட்ட முடிவுகள், திராவிட மாணவ உலகு, எத்தகைய சிந்தனைச் சிற்பிகளின் கூடாரம் என்பதன் அத்தாட்சி.

* * *

வேதனையும் சோதனையும் நிரம்பிக்கிடக்கும் திராவிட சமுதாயத்தை மீட்பது என்பது சாதாரணவேலையல்ல. அதன் பொறுப்பும், அதற்குநாம் காட்டவேண்டிய தியாகமும், சமாளிக்கவேண்டிய எதிர்ப்பும், ஏராளம். எனினும், அந்தநற்பணிக்கு ஊக்கமும் உற்சாகமும் இளைஞர்களின் குரல் மூலம் கிடைக்கிறது, எப்போதும் கிடைக்கும், என்ற நம்பிக்கை, அவைகளையெல்லாம் பஞ்சு போலப்பறக்கடித்துப்புதுவேகத்தைத் தருகிறது.

திராவிட மாணவ உலகுதந்த தளபதிகளால் இன்று நாட்டில், நமதியக்கத்துக்கு வளர்ந்திருக்கும் செல்வாக்கை நாம்மட்டுமல்ல, கருத்துக் குருடர் தவிர எல்லோரும் மறுக்கமுடியாது.

அவர்களால், புதுச்சோலை வளர்கிறது! அவர்கள் தியாகத்தால் புதுத்தென்றல் வீசுகிறது! அவர்கள் பெருந்தொண்டால் நம் கொள்கைகள் செல்லாத இடமெல்லாம்சென்றுவிட்டன!

அத்தகையவீரர் அணிவகுப்பின் 'இரண்டாவது" பிரிவு, தயாராகயிருக்கிறது என்பதை சென்னை மாணவர் மாநாடு, தெளிவாகக் காட்டிற்று.

திராவிட இயக்கம், ஒரு மாபெரும் சாதனைக்காகப் போராடிக்கொண்டிருக்கிறது. கைவிட்டுப்போன நாட்டை மீட்கும் பணி சாதாரணமானதல்ல, மகத்தானது. நமது இலட்சியம் கானல் நீரல்ல; நாமும் கண்மூடித்தனமாக 'நடைபெறாத' ஒரு காரியத்துக்காக வீண் வேலையில் ஈடுபடுவோருமல்ல! ஆகவே, நாட்டின் விடுதலைப் போரில் ஈடுபட்டிருக்கும் நம்முடைய எதிர்காலம் —பல சிக்கல்களோடு காட்சி தருகிறது. இந்தச் சிக்கல்கள் தீரவும், புது முயற்சிகளில் ஒத்துழைப்பை நல்கவும், நமது மாணவப்படை முன்வர வேண்டும். "இன்றைய மாணவர்கள்-நாளைய மந்திரிகள்"—எனவே, விடுதலைப் போருக்கு தம்மைத் தத்தம் செய்யும் திராவிட மாணவர்கள், தமது உலகியல் அறிவையும் நூலியல் பண்பையும் பன்மடங்கு வளர்த்துக்கொள்ளவேண்டும். ஒரு மாபெரும் சமுதாயத்தைப்புதிதாக ஏற்படுத்தும் பொறுப்பு-அவர்களுடையது. ஆகவே, வீண் பிரதாபங்களில் நேரத்தை வீணாக்காது, அறிவுக் களஞ்சியங்களாகத் தங்களை ஆக்கிக்கொள்ளவேண்டும்.

திராவிட மாணவர்கள்—ஏட்டுப் பூச்சிகளாக இல்லாது, பள்ளி வாழ்வு முடிந்ததும் பொது வாழ்வுபுகும் இலட்சியக் காளைகளாகவே இருந்து வருகின்றனர். இந்த நிலை, தேம்பியழும் திராவிடத்துக்கு வரவேற்கக்கூடியதுமட்டுமல்ல, பூரிப்படையவேண்டியதுமாகும்.

நமது மாணவர்கள்—தியாகத்தின் சின்னங்கள். பல சோதனைகளுக்கு ஆட்பட்டாலும் அஞ்சாது, வீரமுடிவோடு வெளிக்கிளம்பும் தமிழின் குழந்தைகள்.

அவர்களது படைவரிசையை, சென்னை மாநாட்டில் கண்டபோது நமது நரம்புகளிலெல்லாம் புது இரத்தம் புகுந்தது! பூரிப்பு இதயமெல்லாம் நிறைந்தது!!

இன்றைய மாணவர்களே வருங்காலச்சிற்பிகள்.

எனவே, பொறுப்போடு, அறிவைத் திரட்டி, அதை நாட்டுக்குப் படைக்கும் அவர்கள் வரிசை வளரட்டும். அவர்கள் பணி ஓங்கட்டும்.

வளர்க அறிவு! வாழ்க நமது செல்வங்கள்!! என்று இதயத்தில் நிரம்பி வழியும் வாழ்த்துக் குவியல்களோடு நமது அன்பு மாலைகளைச் சூட்டுகிறோம்!

வாழ்க திராவிட மாணவ முன்னேற்ற கழகம்!

# பகிரங்க விசாரணை வேண்டும்!

## கொடுமைகள் குறித்து கண்டனம்

சென்னை சடியடி தர்பார், குன்றத்தூர் குண்டுமாரி குறித்து நாடெங்கும் கண்டனக்குரல் எழுப்பியிருக்கிறது.

ஆங்காங்குள்ள நமது கிளைக்கழகங்கள் மேற்படி கொடுமைகள் குறித்து பகிரங்க விசாரணை நடைபெறவேண்டுமென வலியுறுத்தி சென்னைபிரதமருக்கு நூற்றுக்கணக்கான தந்திகளை அனுப்பியுள்ளன.

அவைகளின் விபரத்தை, இடமின்மையால், முழுதும் வெளியிட முடியவில்லை.

கண்டனத்தந்திகள், தீர்மானங்கள் அனுப்பிய கிளைக்கழகங்களில் சிலவற்றைமட்டும் தந்துள்ளோம். பிற, பிறகு,

| | |
|---|---|
| சென்னை நகரம் | சங்கரநயினார் கோவில் |
| திருச்சி | தவுட்டுப்பாளையம் |
| இடைக்காட்டூர் | வடக்கூர் (தூத்துக்குடி) |
| கடையநல்லூர் | குடந்தை |
| பலராமபுரம் | அரியலூர் |
| நாகப்பட்டினம் | மதுரைநகரம்— திராவிடமறுமலர்ச்சிக் கழகம் |
| திருச்சுழி | |
| செயங்கொண்டம் | |
| நாமகிரிப்பேட்டை | சலகண்டபுரம் |
| நாகூர் | சின்னமனூர் |
| ஆரணி | சேதுக்குவாய்த்தான் |
| பழனி | காரைக்குடி |
| பொள்ளாச்சி | இடைப்பாடி |
| திண்டுக்கல் | சங்கரநயினார்கோவில் |
| தூத்துக்குடி | வேலூர்-வீரபாண்டியக் கட்டபொம்மு நூல் மன்றம் |
| குளித்தலை | |
| திருத்தங்கல் | |
| பேராவூரணி | ஏறல் வட்டாரக் கழகம் |
| திருக்களாச்சேரி | ஏறல் |

| | |
|---|---|
| காஞ்சி—நகரக் கழகம் | சிறுத்தொண்டநல்லூர் |
| ,, பகுத்தறிவு மன்றம் | குள்ளம்பட்டி |
| ,, பிள்ளையார்பாளையம் கிளைக்கழகம் | அக்கிபேட்டை (பெங்களூர்) |
| | தேசமுகிப்பேட்டை |
| ,, அழகிரி அறிவு மன்றம் | வடசென்னை 3-வது வட்டம் |
| ,, மறுமலர்ச்சி கழகம் | மருதாடு |
| ,, அறிவு வளர்ச்சிக் கழகம் | கள்ளக்குறிச்சி |
| ,, முன்னேற்றபகுத்தறிவுக்கழகம் | தூத்துக்குடி நகர தி. மு. க. |
| ,, கம்மாளத்தெரு கிளைக் கழகம் | வதுவார்பட்டி |
| | அழகிச்சிபட்டி |

—✲—


## காஞ்சியில் 20—11—50-ல்

சிறை சென்று மீண்ட

கே. டி. எஸ். மணி, வி. பி. சிவம்

ஆகியோருக்கு

மாலை 5-மணிக்கு பஸ் நிலையத்திலிருந்து

ஊர்வலம் நடைபெறும்.

இராம. அரங்கண்ணல் தலைமையில்

பாராட்டுக்கூட்டம்

மறுமலர்ச்சி கழகம் அருகில் 6-மணிக்கு

நடைபெறும்.

**சி. என். அண்ணாதுரை**

பேசுவார்.



## நாஞ்சில்நாடு

## தி. மு. க.

## முதல் மாநாடு

—✲—

## நாகர்கோவிலில்

**டிசம்பர் 28, 29 தேதிகளில்**

**நடைபெறும்**

விபரம் பிறகு



## வெளிவந்து விட்டது!

சிந்தனைச் சித்திரம்
தோழர் ப. கண்ணன் எழுதிய பகுத்தறிவுச் சிறு கதைகள் 0 10 0

வால் முளைத்த சாமியார்
தோழியர் ப. க. குஞ்சிதம் எழுதிய சிறுவர் அறிவுக் கதை 0 2 0

### முன்னிருப்பு

திருக்குறள் இசைப்பாடல்

| | | | |
|---|---|---|---|
| பாவலர் வேலாயுதசாமி | 0 | 7 | 0 |
| மின்னொளி — ப. கண்ணன் | 0 | 6 | 0 |
| சிந்தனைச் சுடர்—சி. பி. சிற்றரசு | 0 | 5 | 0 |
| கேட்டிக்காரன்—ப. க. குஞ்சிதம் | 0 | 2 | 6 |

### அச்சில் உள்ளவை

ஒரே முத்தம் — மு. கருணாநிதி

கன்னியின் சபதம் — ப. கண்ணன்

பாலைவனக் குயில்கள்—இராம. அரங்கண்ணல்

பிரின்சிபால் – ராமசாமி — மு. இராசகோபாலன், B. A.,

பைங்கிளி — ப. க. குஞ்சிதம்

சாய்ந்த கோபுரம் — சி. பி. சிற்றரசு

வியாபாரிகளுக்கு ஏற்ற கழிவு உண்டு.

விவரங்களுக்கு:

**தென்றல் நூற்பதிப்புக் கழகம்**

சலகண்டபுரம் : : சேலம் மாவட்டம்.

# போலீசுக்கு 'புதுவேலை' வந்துவிட்டது!

## சிறைச்சாலை சிறப்படைகிறது

## விலங்கு—இழிவின் சின்னமல்ல

## மாணவ சேவை மகத்தானது

### மாணவரிடையே சம்பத்



சென்னையில் நடந்த மாணவ மாநாட்டில் ஈ. வே. கி. சம்பத் நிகழ்த்திய சொற்பொழிவின் முக்கிய பகுதிகள் தரப்பட்டுள்ளன

**மாணவ சேவை**

அழிந்துகிடக்கும் நம் திராவிட கலாசார மீட்சி வேலையிலே மாணவத்தோழர்கள் இன்று ஈடுபட்டுள்ளார்கள். இந்த விழிப்புணர்ச்சி, இன்று மாணவரிடையே பரவிவரும் புத்துணர்ச்சி மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலே ஏற்பட்டதாகும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலேதான் ஆரம்பத்திலே திராவிட இயக்க உணர்ச்சி பரவிற்று. பிறகு குடந்தை அரசினர் கல்லூரி மாணவர்களாலே, குடந்தையில் முதன் முதல் திராவிட மாணவர் கழக மாநாடு நடத்தப்பட்டு, நீடாமங்கலத்திலே நல்லதொரு அமைப்பின்கீழ் திராவிட மாணவ அணிவகுப்பு உருவாயிற்று!

மாணவ சமுதாயம், திராவிட இயக்கம் செய்யும் அறப் பணிகளுக்குத் துணை நிற்பது, என்றும்! திராவிட மாணவர்கள் மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து செய்துவந்த இயக்கப் பிரசாரமே இன்றைய வளர்ச்சி! அவர்களின் சேவை அளவிறந்தது. அவர்களின் தொண்டு, நாட்டோரின் பாராட்டுக்குரியது. அவர்கள் செய்த பிரசாரமே இன்று திராவிட இயக்கத்தில் உருவாகி வரும் உணர்ச்சி, பலப்பட்டுவரும் சேவா சக்தி என்பதை யாரும் மறுக்கமுடியாது. அன்று பிரசாரம் செய்த மாணவர்களே, இன்று இயக்கத்தின் முன்னணி வீரர்கள்.

**ஆராயத்தான்!**

இங்கு பேசிய நண்பர்களின் சொற்பொழிவுகளிலே இடையிடையே, அண்மையில் சென்னையில் நடந்த தடியடி, குன்றத்தூர் பேச்சுரிமைப் போரிலே நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் ஆகிய இரு நிகழ்ச்சிகளைப்பற்றிய குறிப்புகள் இருந்தன. அதன் விளைவாக நாட்டிலே ஏற்பட்டுள்ள உணர்ச்சிவேகம் எப்படி உருவாகும் என்ற பயங்கர உண்மையை எடுத்துக் காட்டினார்கள். இது சர்க்காரால் மிக உன்னிப்பாகக் கவனிக்கப்படவேண்டியது. மறக்கவோ, மறுக்கவோ கூடியதல்ல!

மாணவர்களை நாம் அரசியல் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட அழைக்கிறோம் என்று சர்க்கார் கருதக்கூடாது. விலங்கியல் நூல் படிப்பவர்கள், இரசாயனப் பயிற்சி செய்பவர்கள் முன்னால் வேண்டிய பொருள்களைத் தருவார்கள், தாங்களே பரிசோதனை நடத்தித் தெளிவடையட்டும் என்பதற்காக! அப்படித்தான் இங்கும் மாணவர்களுக்கு முன்னால் திராவிட இயக்கக் கருத்துகள் வைக்கப்படுகின்றன, மாணவர்களின் ஆராய்ச்சிக்கு!

இன்றைய காங்கிரசாட்சியாளர் எதிர்க்கட்சிகளை முறியடிப்பதிலே—மன்னிக்கவேண்டும், முறியடிப்பது என்ற வார்த்தையிலாவது கண்ணியமிருக்கிறது—நசுக்குவதிலே முழு மூச்சாக ஈடுபட்டுள்ளார்கள். அவர்களுக்கு எங்கே நாம் கூறுவது புரியப்போகிறது! நாம் மாணவர்களை ஆராயத்தான் அழைக்கிறோம் என்றால், கலக வேலைகளை நடத்தத்தான் படை திரட்டுகிறோம் என்பார்கள்.

**விசித்திர நிலை**

ஆச்சாரியார் சென்னை வந்தபொழுது கருப்புக் கொடி காட்டச் சென்ற தோழர்களில் சிலரைப் பிடித்து, அவர்கள் போக்கு வரத்திற்கு இடைஞ்சலாக இருந்தார்கள், ஆபாசமான வார்த்தைகளைப் பேசினார்கள் என்று குற்றம் சுமத்தி நீதிமன்றத்தில் நிறுத்திவிட்டார்கள்.

நீதிமன்றங்களின் நிலையே இன்று விசித்திரமாகத்தானிருக்கிறது. சாதாரணமாக குற்றவாளிகளாக கூண்டிலே நிறுத்தப்படுபவர்கள், எப்படியாவது தண்டனையில்லாது தப்பித்துக்கொள்ள முயற்சி செய்வார்கள். நீதிபதியோ எப்படியும் தண்டித்துவிடவேண்டும் என்று பார்ப்பார். ஆனால், இன்று, எப்படியும் சிறைக்கு சென்றுவிடவேண்டும் என்று எண்ணிக்கொண்டிருப்போர் கூண்டில், எந்த வழியிலாவது வெளியிலே இவர்களை அனுப்பிவிடத் தவிக்கும் நீதிபதி! இது விசித்திரந்தானே!

'இனிமேல் இப்படிச் செய்யமாட்டாயே?' என்கிறார், நீதிபதி. 'எதை?' என்கிறான் குற்றவாளி. "கலகம், பாதையிலே செல்வோருக்கு இடையூறு" என்று விளக்குகிறார், நீதிபதி. 'கலகம் செய்யமாட்டோம்—ஆனால், கருப்புக்கொடி காட்டுவோம்; அந்த உரிமை எங்களுக்கிருக்கிறது' என்கிறான், நம் தோழன். இந்த உரைபாடல், நீதிமன்றங்களில் வாடிக்கையாகிவிட்டது, ஆட்சியாளரின் மதிகுறைந்த போக்கால்!

**புதிய அடக்குமுறை**

ஆச்சாரியார் சென்னைக்கு வந்தார். அவர் சாதாரணமனிதரல்ல—ஒருஉபகண்டத்தின் மந்திரி சபையிலே அங்கம் வகிப்பவர். அவர் தனிமனிதரல்ல—ஒரு தத்துவத்தின் பிரதிநிதி. நாமும் தனிப்பட்டவர்களல்ல, ஒரு மாபெரும் சமுதாயத்தின் பிரதிநிதித்துவம் வாய்ந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். நாம் கருப்புக்கொடி காட்டினோம். இன்று நாட்டின் நிலை தீபற்றிக்கொண்டதுபோல உள்ளது. இதில் வயது, பருவம் பார்த்து தீ அவிக்க முற்பட முடியாது. குழந்தையானாலும் ஒரு குவளை தண்ணீர் ஊற்றினால் அதனால் ஒரு பக்கத் தீ தணியும். ஆகவே, மாணவர்கள், மற்றவர்கள் என்ற பேதம் இங்கு கூடாது.

நாம் முன்பு சிறு கூட்டம். ஆகவே, அலட்சியப்படுத்தினார்கள். இப்பொழுது வளர்ந்துவிட்டோம். எனவே, அடக்கப் பார்க்கிறார்கள். போலீஸ் இலாகாவை நம்புகிறார்களே தவிர நாகரீகமான முறையில் நடந்துகொள்ளவே இல்லை. பெரிய தலைவர்கள் வராவிட்டாலும், சின்னத் தலைவர்களாவது நம்மிடம் வந்து கலந்து பேசியிருக்கலாம். ஆனால், அவர்களிடம் அந்த அளவு கண்ணியத்தையோ நாகரீகத்தையோ எதிர்பார்க்கக் கூடாதுதான்! அவர்கள் போலீஸினால் இந்த அவனியை ஆண்டுவிடலாம் எனக் கனவு காண்கிறார்கள்.

திராவிட இயக்கத்தவரை எப்படி ஒடுக்குவது என்பதுபற்றி ஆராய மந்திரி மாதவமேனன் 'இரும்பு மனிதரை'க் கண்டுபேச டெல்லி நோக்கி பறந்து சென்றிருக்கிறார். இரவல் மூளைவாங்க வாயுவேகத்தில் போயிருக்கிறார்.

அவர் திரும்பியும் வந்துவிட்டார். இப்பொழுது புதிய பலத்தோடு, புதுவித அடக்குமுறை எவும் அதிகாரங்களோடு இருப்பார் என்பது நமக்குத் தெரியும். 'சென்னை' வெறும் ஒத்திகை—'குன்றத்தூர்' ஒரு பரீட்சை—அவர்கள் இனிமேல்தான் கொடுமைகள் அதிகம் செய்யப்போகிறார்கள். அவர்களிடம் எதையும், எந்நேரத்திலும் எதிர்பார்க்கலாம். மேலும் கொடுமைகள் அவர்கள் செய்யாமல் இருப்பதற்குக் காரணம், கொடுமைகள் அவர்களுக்குப் புலப்படவில்லையென்பதாலே தவிர, கண்ணியத்தாலல்ல!

(11-ம் பக்கம் பார்க்க)

# நாடு பிரிந்தால் நலமடைவோம்

## வடநாட்டார் சுரண்டல் ஒழியட்டும்

### முன்னாள் அமைச்சர் முத்தையா முழக்கம்

8—11—50-ல் சென்னையில் நடந்த திராவிட மாணவ முன்னேற்றக்கழக மாகாண மாநாட்டு மாலை நிகழ்ச்சியில் கலந்துகொண்ட முன்னாள் அமைச்சர் முத்தையா ஆங்கிலத்தில் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் இது.

"இங்கு பல மாணவ நண்பர்கள் இன்று திராவிடஸ்தானிலே உள்ள சர்க்காரால் கையாளப்படுகிற கல்வித் திட்டத்தைப் பற்றி விளக்கிப் பேசினார்கள். அதிலே உள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டினார்கள். அதற்கு மாற்றங்கள் எப்படி எப்படி செய்யவேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள். கல்வித் திட்டம் நம் கருத்துக்கு ஏற்ற முறையில் அமைய வேண்டுமானால் நம் நாடு நமதாக இருக்க வேண்டும்.

மருத்துவக் கல்லூரியிலே எதனை கற்பிக்க வேண்டும், இன்ஜினியரிங் கல்லூரியில் எப்படி பாடதிட்டம் இருக்கவேண்டுமென்று இங்கு பேசலாம் — சொல்லலாம்—செய்ய முடியாது! ஏன்? நாம் வடநாட்டார் ஆதிக்கத்தின் கீழிருக்கிறோம். நாம் திராவிடஸ்தானை அடைந்து விட்டால் நம் நாட்டிற்கு, இனத்திற்கு, அதன் உயர்விற்கு ஏற்ற முறையில் கல்வித் திட்டத்தை உருவாக்கிக் கொள்ள முடியும்.

கல்வி முறையில் மட்டுமல்ல, எல்லாத் துறைகளிலும் குறைபாடுகள் மலிந்திருக்கின்றன. துன்பங்கள் நிறைந்திருக்கின்றன. அவைகளை நீக்கவே போராடி வருகிறோம். சமுதாயத் துறையில், பொருளாதாரத் துறையில், அரசியலில் நாம் வடநாட்டோடு இணைந்திருப்பதால் பல தொல்லைகளை சகித்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். பல இன்னல்களை தாங்கிக்கொண்டும் வருகிறோம். இவைகளுக்கெல்லாம் ஒரே மருந்து, நாம் திராவிடஸ்தானை அடைவதே!

இன்று வடநாட்டுக் கடைகளுக்கு முன்னால் மறியல் நடைபெறுகிறது. இதனை எதிர்த்திடும் காங்கிரஸ் அன்பர்கள், வடநாட்டார் இங்கிருப்பதுபோல, தென்னாட்டார் வடநாட்டில் வாழ்கிறார்களே—அங்கே பல வேலைகளில் உள்ளனரே என்கின்றனர். ஆனால் வடநாட்டார், இங்கு சுரண்டுவது போல அவர்கள் இல்லை என்பது மட்டுமல்ல, எண்ணிக்கையிலும், அவர்கள் அடையும் தகுதியிலும் வருவாயிலும் குறைவான நிலை இருப்பதை மறந்து விட்டுப் பேசுகிறார்கள்.

திராவிட இயக்கம் தேர்தலில் நிற்கப் போவதில்லையென்று கூறுவதாலேயே, காங்கிரசாட்சியாளர் களிப்படைந்துவிடக்கூடாது. ஏனெனில் அவர்கள் தேர்தலில் நிற்காவிட்டாலும், காங்கிரசிற்கு எதிர்ப்பாக நிற்பவர்கள் பலர் இருக்கின்றனரே, அவர்களை ஆதரித்தால் என்ன செய்வது? அல்லது கட்சியைச் சேராதவர்களையும் காங்கிரசிற்கு எதிர்ப்பாக நிறுத்தமாட்டார்களா என்று யோசிக்கவேண்டும்.

✱

# வட நாட்டுச் சுரண்டலை ஒழிக்க திராவிட மாணவ உலகின் தீர்மானம்!

## கைத்தறித் துணிகளையே உடுப்போமென வீர முழக்கம்

## "படிக்க எல்லோருக்கும் வசதி கொடு"—நல்ல கல்வித் திட்டம் காண வேண்டுகோள்

## "நாட்டுப் பிரிவினை பெற்றே தீருவோம்"—"வகுப்பு நீதியை விட்டுக்கொடோம்"

### ஆளவந்தார் அடக்குமுறைக்குக் கண்டனம்—மறியல் மாவீரர்களுக்குப் பாராட்டு

★ கூடுமானவரையில் திராவிடத்தில் தயாராகும் கைத்தறித் துணிகளையே உபயோகிக்க வேண்டும்.

★ வடநாட்டுச் சுரண்டலை ஒழிக்க கூடுமானவரையில் வடநாட்டுப் பொருள்களை பகிஷ்கரிக்க வேண்டும்.

என்று மாணவர்களைக் கோரும் முக்கிய தீர்மானமொன்று சென்னையில் பெருமிதத்தோடு நடைபெற்ற சென்னை மாநில திராவிட மாணவர் முன்னேற்றக் கழக முதல் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

வளர்ந்துவரும் திராவிட மாணவ உலகின் விழிப்புணர்ச்சியை விளக்கும் பொறுப்புமிக்க இத்தீர்மானம் மாணவப் பிரதிநிதிகளால் மகத்தான கைதட்டுதல்மூலம் வரவேற்கப்பட்டது. இதுவரை நடந்த மாநாடுகளைக்காட்டிலும், இம்மாநாடு எதிர்கால வரலாற்றில்முக்கியமானதொரு இடம்பெறும்வகையில் பல தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறது.

உலகநிலை, நாட்டுநிலை குறித்து, மாணவர்கள் தீர்மானங்கள் கொண்டுவந்து பேசியபோது நமது அகம் எல்லாம் குளிர்ந்தது. 'எதிர்காலத் திராவிடம் அருமையான புத்துலகப் படையைப் பெற்றுவிட்டது' என்று இதயமெல்லாம் பூரித்தது.

மாணவக் காளைகளின் பொறுப்புள்ளத்தை நாட்டினர்க்கு அறிவிக்கும் திராவிட மாணவ முன்னேற்றக் கழக மாநாட்டின் தீர்மானங்கள்:—

(1) இம்மாநாடு, பேரறிஞர் பெர்னட்ஷா, தமிழ்க்கடல் மறைமலை அடிகள், சேலம் கல்லூரித் தலைவர் திரு ராமசாமி ஆகியோர் மறைவு குறித்து ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

(2) சர்வ தேசிய அரங்கத்தில் வல்லரசுகளுள் ஏற்பட்டுள்ள ஆதிக்கவெறியின் காரணமாக, உலக அமைதிக்குப் பங்கம் விளைந்திருப்பதைக் கண்டு, இம்மாநாடு ஆழ்ந்த கவலை கொள்வதோடு, அம்மாதிரி பயங்கர நிலையிலிருந்து மீறி, உலக சமாதானத்தை நிலைநாட்ட, ஆவன செய்ய இம்மாநாடு உறுதிகொள்கிறது.

(3) வரலாறு, இயற்கை அமைப்பு, கலாசாரம், மொழி ஆகிய எல்லா வழிகளிலும் தனித்தன்மையுடைய திராவிட நாடு, வடநாட்டு ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுத் தன்னாட்சி பெறவேண்டும் என்ற கோரிக்கையை, இம்மாநாடு முழு மனதுடன் ஆதரிப்பதுடன், இதற்காக திராவிட மாணவ முன்னேற்றக் கழகம் செய்துவரும் கிளர்ச்சிகளுக்கும், திராவிட இயக்கத்தினர் செய்துவரும் கிளர்ச்சிகளுக்கும் தன் முழு ஒத்துழைப்பை அளிக்குமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறது.

(4) பிற்போக்கான நிலையிலுள்ள திராவிட மாணவர்களின் நலனை முன்னிட்டுப் பலகாலமாக இருந்துவந்த கம்யூனல் ஜி. ஓ. வை சட்ட விரோதமானது என்று சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பைக் கண்டு இம்மாநாடு வருந்துவதோடு, அதை சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்துள்ள சென்னை சர்க்காரைப் பாராட்டுவதோடு, சுப்ரீம் கோர்ட்டிலும் கம்யூனல் ஜி. ஓ. வுக்கு விரோதமான தீர்ப்பு கிடைத்தால், அரசியலமைப்பைத் திருத்தியாவது கம்யூனல் ஜி. ஓ.வை நிலைநிறுத்தும்படி சென்னை அரசியலாரை கேட்டுக்கொள்கிறது.

(5) மக்களின் அடிப்படை உரிமைகளான பேச்சுரிமை, எழுத்துரிமை, எண்ண உரிமை இவைகளை அர்த்தமற்றவைகளாக்கும் வகையில், கூட்டங்களுக்கு 144 போடுவதும், புத்தகங்களைப் பறிமுதல் செய்வது. வழக்குத் தொடுப்பது, பத்திரிகைகளுக்கு ஜாமீன் கேட்பது, நாடகங்களுக்குத் தடைவிதிப்பது போன்ற அடக்குமுறைச் செயல்களைச் செய்வதையும், ஜனநாயக உரிமைப்படி கருப்புக் கொடி காட்டச் சென்றவர்கள்மீது கடுமையான தடியடியும், பேச்சுரிமை காக்கச் சென்றவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததையும் இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

(ஆ) பேச்சுரிமை எழுத்துரிமைக்காகப் போராடி குண்டடியும் தடியடியும் பட்டவர்களையும், சிறை சென்றவர்களையும் இம்மாநாடு பாராட்டுகிறது.

(6) ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் கல்லூரிகளில் இடமின்மை காரணமாக உயர்நிலைக் கல்விபெற இயலமுடியாமற் போவதைக் கண்டு இம்மாநாடு கவலை கொள்வதுடன், இந்நிலை மாற மேலும் பல கல்லூரிகளையும் பள்ளிக்கூடங்களையும் ஆரம்பிக்கவேண்டுமென்று சென்னை அரசாங்கத்தை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது:

(7) (அ) பல காரணங்களால் உயர்நிலைப் பள்ளிகளில் சேர்ந்து படிக்க முடியாமற்போன இளைஞர்களுக்கு வசதிசெய்யும் வகையில் கல்லூரிகளில் சேராமலே தனிப்பட்ட முறையில் படித்துப் பல்கலைக் கழகத் தேர்வுகளில் எழுத அனுமதிக்குமாறு இம்மாநாடு சென்னை பல்கலைக் கழகத்தைக் கேட்டுக்கொள்கிறது.

(ஆ) தமிழ்ப் புலவர் அல்லது வித்வான் பட்டம் பெற்றவர்களை, எல். போன்ற பட்டத் தேர்வுகளுக்கு தனிப்பட்ட முறையில் [illegible] மதிக்கும்போது, அவர்கள் முன்னமே தகுதிபெற்றுள்ள தமிழ் [illegible] யும் எழுதும்படி வற்புறுத்தாது அதற்கு விலக்களிக்கும் [illegible] கலைக் கழகத்தாரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

(8) தற்போதுள்ள வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ள நிலை[illegible] ஊரி, பள்ளி ஆசிரியர்களின் சம்பள விகிதத்தை அதிகமாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, மாணவர்களுடைய பள்ளி, கல்[illegible] சம்பள விகிதத்தைக் குறைக்கவேண்டுமென்று இம்மாநாடு சென்[illegible] சாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது.

(9) ஆதாரக் கல்வி, குடிசைக் கைத்தொழில் என்ற பல [illegible] களில் செய்யப்பட்டுவரும் கல்வித் திட்டங்களை மிகவும் பிற்[illegible] னது என்று இம்மாநாடு கருதுவதோடு, பகுத்தறிவு, விஞ்[illegible] இவைகளின் அடிப்படையின்மீது நல்லதொரு கல்வித் [illegible] தைக் கொண்டுவர ஆவன செய்ய அரசாங்கத்தாரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

(10) ஆடை முதற்கொண்டு பல்வேறு வகையான பொருள்கள், வடநாடு முதலிய பிற நாடுகளில் உற்பத்தியாகி, திராவிட நாட்டிலே கொண்டுவந்து குவிக்கப்படுவதால், இங்கு தொழில் வளம் குன்றி, செல்வம் தேய்ந்து வருவது கண்டு, இம்மாநாடு கவலைப்படுவதுடன், இந்தச் சுரண்டலைப் போக்குவதற்காக, இனி கூடுமான வரையில் வடநாடு முதலிய பிறநாட்டுப் பொருள்களை பகிஷ்கரித்து திராவிடத்திலே தயாரிக்கப்படும் பொருள்களையே உபயோகிக்கவேண்டுமென்று திராவிட மாணவர்களையும் பொது மக்களையும் கேட்டுக்கொள்வதுடன், இதற்கு முதல் துவக்கமாக, ஆடை வகையில், திராவிட கைத்தறித் துணிகளையே கூடுமான வரையில் உபயோகிப்பது என்று தீர்மானிக்கிறது.

(11) வடநாட்டுப்பொருளாதார ஏகாதிபத்தியத்திடம் திராவிட நாடு சிக்கிச்சீரழிவதை உலகுக்குஉணர்த்தவும்,மேற்படி ஏகாதிபத்தியத்திடமிருந்து திராவிட நாடு விடுதலை பெற வேண்டும் என்ற கொள்கையை வலியுறுத்தவும், இப்போது நடைபெற்றுவரும் வடநாட்டுத் துணிக்கடை, உணவுக்கடை மறியல் உதவிபுரிவதால், அந்த முயற்சியை இம்மாநாடு பாராட்டுவதுடன், அந்த அறப் போரில் ஈடுபட்டுச் சிறைசென்ற தோழர்களைப் பாராட்டுகிறது.

1950—51 ஆண்டிற்கு மாகாணச் செயற்குழு தெரிந்தெடுக்கப்பட்டது. கடைசி தீர்மானமாக மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

முதல் இரண்டு தீர்மானங்கள் தலைவர் அவர்களாலேயே கொண்டுவரப்பட்டு நிறைவேறின. தீர்மானங்களை முன் மொழிந்தும், வழி மொழிந்தும் மாகாணத்திலே உள்ள எல்லா கல்லூரிகளின் சார்பாகவும் மாணவத் தோழர்கள் எஸ். ஏ. கபீர் பாலகோபால், வீ. இராசகோபால், சக்கிரியா, சண்முகம், பெருமாள், கண்ணன், ராஜேந்திரன், சந்திரன், பாலசுப்பிரமணியன், வி. கண்ணன், குணாளன், சிவசாமி, சுப்பிரமணியன், நாராயண ரெட்டி, கோ. பெருமாள், டி. பாண்டியன், டி. கே. பொன்னுவேலு ஆகியோர் பேசினர்.

—★—

**திராவிட மாணவ முன்னேற்றக் கழக மாகாண செயற்குழு 1950—51**

பொதுச் செயலாளர்
கே. ஏ. மதியழகன், பி. ஏ.,

உதவிச் செயலாளர்கள்
எஸ். சிவசாமி—பச்சையப்பன் கல்லூரி
வி. இராசகோபால் குடந்தை கல்லூரி
கே. தண்டபாணி—கோவைக் கல்லூரி

பொருள் உறுப்பினர்
டி. பாண்டியன் பச்சையப்பன் கல்லூரி

நிர்வாகக் குழுவினர்
எஸ் இராமச்சந்திரன், எஸ். கபீர், முத்துவேலு, கண்ணன் — சென்னை.
டி. வேங்கடாசலம்—அண்ணமலை.
டி. இராமச்சந்திரன்—வாணியம்பாடி
எம். சென்னியப்பன்—கோவை
ராஜதுரை—விருதுநகர்
சிவப்பிரகாசம்—சேலம்

## 'பிளிட்ஸ்' காட்டிய கண்ணியம்!

—☼—

சென்னை தடியடி தர்பார் பற்றியும் குன்றத்தூரில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம் பற்றியும் தி. மு. க பொதுச் செயலாளர் சி. என். ஏ.—ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தார்—சென்னை காங்கிரஸ் சர்க்காரின் போக்கை விளக்கவும், தி. மு. கழகக் கொள்கைபற்றிய தெளிவு உண்டாக்கவும். இந்து—மெயில்—தினமணி—தினசரி—மித்ரன் ஆகிய ஏடுகளில்லை சுருக்கம் வெளியிட்டனர். சண்டே அப்சர்வர், விளக்கமாக முழு அறிக்கையை வெளியிட்டது.

பம்பாயிலிருந்துவரும் 'பிளிட்ஸ்' எனும் ஆங்கில வாரத்தாள், முற்போக்கான கருத்து கொண்ட ஏடு, காங்கிரஸ் சர்வாதிகாரப் போக்கைக் கண்டிக்கும் ஏடு, ஜனநாயகத்துக்காக வாதாடும் ஏடு, என்று கூறப்பட்டு, திராவிட மாணவர்களாலும், இளைஞர்களாலும் பெரிதும் ஆதரிக்கப்பட்டு வருகிறது.

பொதுச் செயலாளரின் அறிக்கை, 'பிளிட்ஸ்'க்கு அனுப்பப்பட்டது. 'பிளிட்ஸ்', அந்த அறிக்கையை அப்படியே, பொதுச் செயலாளருக்குத் திருப்பி அனுப்பிவிட்டது!

பல்லாயிரக் கணக்கான உறுப்பினர்கள் கொண்டதும், ஐந்நூறுக்கு மேற்பட்ட கிளைக்கழகங்கள் கொண்டதும், இடையறாது பணியாற்றி வருவதும், காங்கிரஸ் சர்வாதிகாரப் போக்கினால் தாக்கப்பட்டு வருவதுமான, தி. மு. கழகத்தின் பொது அறிக்கைக்கு, 'பிளிட்ஸ்' காட்டும் மரியாதையை, திராவிட மக்கள் உணரவேண்டும் என்பதற்காகவே இதனை வெளியிடுகிறோம்.

'பிளிட்ஸ்' முற்போக்கான ஏடு என்று எண்ணி ஆதரிக்கும் திராவிட மாணவர்களும் இளைஞர்களும், 'பிளிட்ஸ்' காட்டிய கண்ணியத்தைக் காண வேண்டுகிறோம்.

வெளியிடுவதற்காக அறிக்கை அனுப்பினால்—திருப்பி அனுப்பி விடுகிறது 'பிளிட்ஸ்'! அவ்வளவு கண்ணியம்!!

# நாமிருக்கும் இபத் திராவிட நாடு நமதென்பதறிந்தோம்!

## கன்னடத்தில், கேரளத்தில், ஆந்திரத்தில் நம் குரல் ஒலிக்கும்!

## கப்பற்படை இல்லையா இது ஒரு குறையாம்!

### சர்ச்சில் சொல்லவில்லை மந்துரார் சொல்கிறார்

### நாளாகும் புரிய, நசிவிடாது பிரச்சினை!

### திராவிட மாணவர் மாநாட்டில் சி. என். ஏ.

8—11—50 காலை 9-மணி யளவில், சென்னை செயின்ட் [illegible] பத்தில் கூடிய திராவிட மாணவ முன்னேற்றக் கழக முதல் [illegible] தோழர் சி என். அண்ணாதுரை திறந்துவைத்தார்.

அப்பொழுது அவர் 'ஆளவந்தாருக்கு எதற்கெடுத்தா[illegible] வந்து விடுகிறது—நான்குபேர் சேர்ந்திருந்தால் பயம், நாடகமாடி[illegible] புத்தகம் படித்தால் பயம், பாடல் பாடினால் பயம், கூட்டம்[illegible] — அஞ்சி அஞ்சி சாகிறார்கள் இந்த ஆளவந்தார்கள். ஏனோ [illegible] அஞ்சி அஞ்சி சாவார் இவர் அஞ்சாத பொருளில்லை அ[illegible] என்று கூறலாம்போல் தோன்றுகிறது. அவர்கள் பயத்தைப் [illegible] போக்க 144 தடையுத்தரவுகளை கணக்கில்லாமல் வீசுகிறார்கள். [illegible] அவர்கம் துளியும் தயக்கமின்றி நடத்துகின்றனர்' என்று குறி[illegible] மேலும் கூறியதாவது:—

#### முன்னணிப் படை

"நான் பலாத்காரத்தில் நம்பிக்கையில்லாதவன். அதுவும் மாணவர்களை பலாத்கார முறைகளில் ஈடுபடுத்த அன்றும் சம்மதித்ததில்லை, இன்றும் சம்மதிக்கவில்லை; என்றுமே சம்மதிக்கமாட்டேன். திராவிடர்க் கழகத்திலே, முன் வரிசையிலே இருந்த படையே திராவிட முன்னேற்றக் கழகமாக இன்று விளங்குகிறது. இன்று நாட்டிலே ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சியின் விளைவாக, எங்கு திரும்பினும் திராவிட மாணவ அணிவகுப்பைக் காண்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணிப் படையே திராவிட மாணவ இயக்கம்!

இப்பொழுது நம் கருத்து பரவாத கல்லூரியைக் காணமுடியவில்லை—உயர்நிலைப் பள்ளி இருப்பதாகத் தெரியவில்லை. திராவிட இயக்கம் இல்லாத கல்வி நிலையங்கள், நம் நாட்டில் இல்லை. நம் கருத்துக்களை, எண்ணங்களை எடுத்துச் சொல்லாத தமிழாசிரியர்கள் — ஆசிரியர்கள் இல்லை. அவர்களை மிரட்டிடும் சர்க்காரும் இந்த உண்மையை உணர்ந்துகொள்ளவேண்டும். மரத்தடியிலிருந்து மாடிப்படிவரை நம் கருத்து பரவியுள்ளது.

திராவிடர் இயக்கம், எங்கும், எந்த உருவிலும் பரிணமிக்கிறது! இதனை ஆளும் சர்க்கார் மறந்துவிடவோ, மறைத்துவிடவோ, மறுத்துவிடவோ முடியாது!

#### அவர்கள் பணி

ஆனால் மாணவர்களை அனாவசியமான கிளர்ச்சிகளில், அவசியமற்ற பலாத்கார வேலைகளில் ஈடுபடச் சொல்லவில்லை. அதே நேரத்தில் அவர்களை மரக்கட்டைகளாகவும் இருக்கச் சொல்லவில்லை!

அவர்கள், நாட்டு மக்கள் மதியை இருளாக்கும் மூட நம்பிக்கைகளை முறியடிக்க, பகுத்தறிவைக் கொல்லும் பொல்லாத எண்ணங்களைப் போக்க, அஞ்ஞானத்தை விரட்ட, நல்லறிவுப் பிரசாரத்திலே ஈடுபடவேண்டும்.

#### எதிர்ப்புகள் ஏராளம்

இந்த அறப்பணியிலே ஈடுபடும்போது எதிர்ப்புகள் ஏராளம் வரும். சாதிக்கொடுமையைச் சாடினால் வகுப்புவாதியென்று வசைமொழி பேசுவர். மத ஊழல்களை எடுத்துரைத்தால் நாத்திகன் என்று நிந்திப்பர். ஏழை, பணக்காரர் என்ற பேதம் ஏன் என்று கேட்டால் மாஸ்கோ கூலியென்று தூற்றுவர். அமெரிக்க முதலாளித்துவத்தைத் தாக்கினால், சோவியத் சர்க்காரோடு சேர்ந்து சோரம் போகிறார்கள் என்று திட்டுவர்.

அந்தி சாயும் நேரம்—உதிர்ந்த மலரிதழ்கள் பட்டாலும் மருளுவான். அவனுக்கு இதழுக்கும்

## மன்னிப்பு கோருமா ?

சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கும் பொருட்டு அங்கே கூடியிருந்த போலீஸ் அதிகாரிகளின்மீது கற்கள் எறியப்பட்டதாகவும், அதற்காகவே தடியடித் தாண்டவம் பேய்க் கோலம் பூண்டதாகவும் சொல்லப்படுகிறது. உண்மையில் தடியடி தொடங்கிய பின்புதான் சிலர் கற்களை வீசியதாக நேரிற் கண்டவர்கள் கூறுகின்றனர். இதில் எதுதான் உண்மை என்பதையும் போலீஸார் தடியடி தர்பார் நடத்தியது நியாயந்தானா வென்பதையும் பொதுமக்கள் அறிய விரும்புகின்றனர். 'ஜனநாயக சர்க்கார்' என்று சொல்லிக் கொள்கின்ற காங்கிரஸ் சர்க்கார் போலீசின் தாறுமாறான தடியடிப் பிரயோகத்துக்குத் தகுந்த சமாதானம் கூறுமா? அல்லது தாக்கிப் புடைக்கப்பட்ட மக்களிடம் மன்னிப்புக் கோருமா?

'முஸ்லீம் முரசு'
நவம்பர் இதழில்.

## ★ குடி கெடுக்கும் குதிரைப் பந்தயம் இன்னும் ஒழியவில்லை! காங்கிரசாட்சி இதைக்கூடவா செய்யக்கூடாது! ★

புழுவுக்கும் வித்தியாசம் தெரியாது. பாம்பை பழுதையென்பான்; பழுதையைப் பாம்பு என்பான். ஆம், அவனுக்குக் கண்களிலே மஞ்சள்பாவியிருந்தால்! நம் அறநெறிப் பிரசாரத்தை தெளிந்த சிந்தனையோடு கவனித்தால், நம்மை தூற்றமாட்டார்கள்—போற்றுவிட்டாலும்!

## நூறு, ஆயிரமாகட்டும்!

சர்க்காரின் சட்டங்கள் கொட்டும்பொழுது, அடக்குமுறைகள் தாக்கும்பொழுது அந்த துன்பத்தைத் தாங்கிக்கொள்ளும் தைரியம் வேண்டும். அவர்கள் அளிக்கும் தண்டனைகளை ஏற்கும் மனத்திடம் வேண்டும். நம் இயக்கத்திலே அத்தகைய மன உரம்கொண்ட மாவீரர்கள் ஏராளம் இருக்கின்றனர். நான் தினந்தினம் பார்க்கின்றேன். அத்தகைய நெஞ்சுரம் வளரட்டும்! அத்தகைய செயல் வீரர்களின் தொகை நூறு ஆயிரமாக வளரட்டும்! இந்தப் பாசறை ஏற்பட்டுவிட்டால் நம் நாடு நம்முடையதாக்கப்படும். அத்தகு அறப்பணிக்கு அழைக்கிறேன், அன்போடு, ஆர்வத்தோடு—உரிமை இருக்கிற காரணத்தால்! அறிவுப் பிரசாரத்திலே ஈடுபடவேண்டுமானால், அறிவுக் கூர்மையை அதிகப்படுத்திக்கொள்ளவேண்டும். அவர்களின் திறமையைப் பெருக்கிக்கொள்ள மாணவ மாநாடுகள் உதவிசெய்யவேண்டும்.

## வெளியே குழப்பம், உள்ளே குமுறல்!

மாணவர்களுக்கு நாட்டின்நிலை நன்றாகத் தெரியவேண்டும், உலகின்போக்கு புரியவேண்டும். உலகத்து நாடுகளிடையே இன்று ஏற்பட்டுள்ள மோதுதல், தாக்குதல், குழப்பம் — இவைகளை அறிந்திருக்கவேண்டும். வடகொரியரை எதிர்த்துத் தென் கொரியர் போராடுகின்றனர். இன்று திபேத் நாட்டுக்குள்ளே சீனத் துருப்புகள் புகுந்துவிட்டன. காஷ்மீரத்திலே இன்னமும் தகராறு—நேபாளத்திலே நல்ல நிலை இல்லை—பாகிஸ்தானோடு சுமுகமான போக்கு இல்லை. இப்படி இந்தியாவின் வடக்கு எல்லை நாடுகளின் சங்கிலித் தொடர்பைப் பாருங்கள். வெளியே குழப்ப நிலை. நாட்டின் உள்ளே இந்த நேரத்தில் ஆட்சியாளர் ஜனநாயக உணர்ச்சியை வளர்க்கவேண்டும். அதிருப்தியைக் குறைக்கவேண்டும். ஆசியாவின் நெருக்கடியைத் தீர்க்கவேண்டுமானால், இந்தியக் குடிகளின் நல்லெண்ணத்தை வளர்க்கவேண்டும். வெளியிலே குழப்பம், உள்ளேயும் குமுறல் கூடாது. ஆரியர், திராவிடர் என்று நாம் பேசினால் உள்நாட்டுக் குழப்பம் செய்கிறோம் என்கிறார்கள். இந்திய ஒற்றுமையைக் குலைக்கிறோம் என்று குற்றஞ் சாட்டுகிறார்கள்—இப்படி மாகாண சர்க்காரும் கூறுகிறது, மத்திய சர்க்காரும் புலம்புகிறது!

இந்திய எல்லைக் குழப்பங்கள் தீரவேண்டுமானால் திராவிட மாணவர்கள் ஒத்துழைப்புவேண்டும். ஆனால், அவர்கள் ஜனநாயக உணர்ச்சி நசுக்கப்படும்பொழுது 'சும்மா' இருக்கமாட்டார்கள். உலகத்திற்கே எடுத்துக்காட்டுவார்கள்.

திராவிட மாணவர்கள் என்றால் தனியானவர்களல்ல—ஜெர்மன் நாட்டு மாணவர்களை ஜெர்மன் மாணவர்கள் என்பதுபோல, பிரான்ஸ் நாட்டு மாணவர்களை, பிரஞ்சு மாணவர்கள் என்று அழைப்பதுபோல, இங்கிலாந்து தேசத்து மாணவர்களை, ஆங்கில மாணவர்கள் என்று கூறுவதுபோல திராவிட நாட்டிலே வாழும் மாணவர்களை திராவிட மாணவர்கள் என்கிறோம். அதுபோலவே ஆரிய மாணவர்கள் என்றாலே, இவர்களுக்கு எதிரிகள் என்று அர்த்தமல்ல! நாட்டின்பேரால், இனத்தின்பேரால் பெயரிட்டு அழைக்கிறோம். ஆகவே, சர்க்காரின் எல்லைத் தகராறுகளை தீர்த்துவைக்க இவர்களின் ஒத்துழைப்பு அவசியம் என்றுணரவேண்டும். அதற்கானவை செய்யவேண்டும்.

## இலட்சிய கீதம்

துவேஷப் பிரசாரம் செய்ய நாம் கூறவில்லை. நாம் பிறந்த நாட்டை நமதாக்கப்போராடுகிறோம். திராவிட நாட்டுப் பிரச்சினையை நாடாள வந்திருப்பவர்கள் சென்ற ஆண்டு அலட்சியப்படுத்தினார்கள். இன்றோ 'பேசத் தெரிந்த' மந்திரிகள் எல்லாம் இதுபற்றியே பேசுகிறார்கள். 'கை தூக்கவே தெரிந்த' சட்டசபையினர்கூட வாய் திறந்துவிட்டனர்! ஆம், நம் இலட்சிய கீதம் கவர்ந்துவிட்டது, 'கனம்களின்' கருத்தை—மகிழ்ச்சி!

## ஓமாந்தூரார் சந்தேகம்

ஓமாந்தூரார் நல்லவர், உத்தமர், உள்ளத்தூய்மை கொண்டவர். அவருக்கு ஏற்பட்டுள்ள சந்தேகத்தை போக்குவதிலே பெருமையடைகிறேன். அவர் கூறுகிறார் திராவிடநாடு அடைய முடியாதது'—அப்படிப் பிரிவினைப் போரில் வெற்றி கண்டாலும் பெருமை இல்லை—பெருமையிருப்பதானாலும், பிரியும் நிலை இன்று திராவிட நாட்டிற்கு இல்லை. அத்தகைய நிலை பிறந்தாலும், பிரிவினை முயற்சிக்கு இவ்வளவு பிரயாசை எடுத்துச் செய்வதால் இலாபம் இல்லை என்று! அவருக்கு சந்தேகம் வளர்ந்து கொண்டே போகிறது.

அவரே கேட்கிறார், கப்பற்படையில்லையே இங்கு, என்ன செய்வீர்கள் என்று. அண்டை நாடுகளாக உள்ளவை எழுப்பவேண்டிய கேள்வி அமெரிக்கா சொல்லவேண்டிய ஒன்று—ஆஸ்டிரேலியா நாடு கேட்க வேண்டிய கேள்வி. ஆனாலும் ஓமாந்தூரார் கேட்கிறார்!

## கப்பற்படை

வாக்கு சாதுர்யத்தால் ஏற்பட்டுவிடக் கூடியதல்லதான் கப்பற்படை — அதற்கு மரம், கரி, இரும்பு போன்ற எத்தனையோ பொருள்கள் தேவைதான். நாம் அறிவோம் இதனை!

அவரும் அறிந்திருப்பார், தமிழ்நாட்டுப் பண்புகளை! உலகமே அதிசயிக்கத் தக்க நிலக்கரிச் சுரங்கங்கள், இரும்புச் சுரங்கங்கள் இங்கு உண்டு கடலும், கடலைச்சார்ந்த இடமும் நெய்தல் என்று பெயர் பெறும், அங்கு வாழ்வோர் பரதவர் என்று அழைக்கப் படுவர், அவர்கள் கப்பற்படைகளை நடத்திடும் மாலுமிகளாக இருந்தனர் என்றெல்லாம் பழைய இலக்கியங்கள் கூறுகின்றன. நம் நாட்டு மன்னர்கள் அயல் நாடுகளின் மீது படையெடுத்துச் சென்றுள்ளனரே, கப்பற்படையின் துணையோடு!

அன்று தமிழக நாவாய்களில் வேண்டுமானால் பீரங்கிகள் கிடையாது; துப்பாக்கிகள் வைத்து சுடும் முறை கிடையாது, அவை அன்று இல்லாத காரணத்தால்! ஆனால் அலைகடலையும் அடக்கிடும் அரும் வீரர்கள், அடல் ஏறுகள் உண்டு. கப்பற்படை நடத்திடும் திறமை உண்டு.

திராவிட நாட்டுப் பிரிவினையை டெல்லியிலே ஏற்றுக்கொண்டு, ஐக்கியநாட்டு சபையிலே ஆமோதிக்கப்பட்டு, தனிநாடு அமைக்கப்பட்டு விட்டால் ஓராண்டில் உலகமே வியக்கும் கப்பற்படையை கட்டிக் காட்ட முடியும்!

## சர்ச்சில் கேட்கவில்லை

இந்திய சுதந்திர போராட்டம் நடந்தபொழுது, இந்தியாவிற்கு சுதந்தரம் பெறும் தகுதியில்லை, ஏனெனில் இந்தியாவிற்கு கப்பற்படையில்லையென்று சர்ச்சில்துரை கேட்கவில்லை—என்றாலும் கேட்கிறார் ஓமாந்தூரார். வெள்ளைக்காரன் சுயாட்சியை மட்டுமல்ல, கப்பற்படையையும் சேர்த்தே கொடுத்தானே!

## சிறு நாடாம்!

கனம் பக்தவத்சலம் கூறுகிறார், திராவிட நாடு சிறிய நாடாம்! இவர் ஏதோ ஆசியாவுக்கே அமைச்சர் என்று நினைத்துக்கொண்டாரோ, என்னவோ, அறியோம். அவர் கூறுகிற சிறுநாட்டின் ஒரு இலாகாவுக்குத்தான் இவர் மந்திரி! நாம் கூறும் திராவிடநாடு, இன்றைய சென்னை மாகாணம். நம் திராவிடநாடு ஜெர்மனியை விடப் பெரியது! இத்தாலியை விடப் பெரியது! ஸ்பெயினைப் போல பல மடங்கு! டென்மார்க்கை விட எத்தனையோ மடங்கு! ஸ்வீடனைப் போல பலஸ்வீடன்கள் கொண்டது! நேபாளத்தைவிட நிச்சயமாகப் பெரியது! திபேத்தை விடப் பெரியது என்று திடமாகச் சொல்வேன்.

பெரிய நாடுதான் சீனு—ஷியாங்கே—ஷேக்குகளின் இருப்பிடமே தெரியவில்லையே இன்று—ஏன்? ஐரோப்பாவையே ஒன்றாக்கி தங்கள் எதேச்சாதிகாரத்தின்கீழ் கொண்டுவர வேண்டும் என்று வலைவீசிய முசோலினி, தன்நிலை மறந்து போராடிய இட்லர் தோற்றுத்தானே போயினர் இறுதியில்!

அட்லாசைப் புரட்டிப் பார்க்கட்டும். சென்னையோடு, மற்ற நாடுகளை ஒப்பிடட்டும். பிறகு சொல்லட்டும், சிறிய நாடு என்பது சிந்திக்க வேண்டிய பிரச்சினையா என்று!

## தமிழகத்தில் மட்டுந்தான்!

சில காங்கிரஸ் தலைவர்கள் அடிக்கடி கேட்கிறார்கள்—திராவிட நாட்டுப் பிரிவினையை ஆந்திரர் ஆதரிக்கிறார்களா, மலையாளத்தார் மதிக்கிறார்களா, கன்னடத்தார் கேட்கிறார்களா, இல்லையே! பின் தமிழகத்தில் மட்டும் பேசிப் பயனில்லை என்று கூறுகிறார்கள்! அவர்களை நான் கேட்கிறேன், தமிழ் நாட்டிலே பேசிவருகின்ற இந்தப் பிரச்சினையை நீங்கள் ஒத்துக் கொள்கிறீர்களா? அதனை முதலில் சொல்லுங்கள். ஆந்திரரும், பிறரும் ஒப்பாததால்தானா நீங்கள் எதிர்ப்பது—அதனைத் தெளிவு படுத்துங்கள் என்று!

இந்தக் கேள்வியைக் கேட்பவர்கள் இரண்டு ரகத்தவர். நமக்கு உதவியாக இருந்து, அங்கெல்லாம் பிரசாரம் செய்துவர வசதிகள் கிடைக்கச் செய்யும் விருப்பமுடையவர். மற்றொரு சாரார் தங்களுக்கும் அந்த வசதி தரும் நிலை இல்லையே என்று ஆயாசப்படுபவர். ஆனால் இப்பொழுது பேசுபவரோ இந்த இரண்டு ரகத்திலும் சேராத, திராவிட நாட்டுப் பிரிவினையையே ஒத்துக் கொள்ளாத காங்கிரஸ்காரர்கள்!

ஆந்திரத்திலே, கேரளத்திலே, கன்னடத்திலே போய்ப் பிரசாரம் செய்ய நேரமுமில்லை, வசதியுமில்லை, அங்கெல்லாம் போகாததற்குக் காரணம், அவர்கள் இதனை ஒப்புக்கொள்ள மாட்டார்களே என்ற அச்சம் அல்ல! அவகாசம் இல்லை!—அவ்வளவுதான்.

ஆந்திரம், கேரளம், கன்னடம், தமிழகம் தனித்தனி சுதந்திர நாடுகளாக இருக்கும். அததற்குத் தனித்தனியான சட்ட சபைகள் உண்டு. 'டெல்லி' இருக்காது இங்கு! இவை நான்கும் சேர்ந்து திராவிட கூட்டாட்சியாக இருக்க வேண்டும் என்பது நம் ஆசை. இதுதான் நாம் கேட்கும் திராவிட நாட்டின் படப்பிடிப்பு!

சிலருக்கு இதுபுரியாமலும், வேறு சிலர்புரிந்தும் புரியாதது போல பாசாங்கு செய்திட வேண்டிய நிர்ப்பந்தமும், நிலையும்—இருக்கின்றன.

ஆந்திரர் ஒப்புக்கொண்டார்களா, மலையாளத்தார் மதிக்கின்றனரா இதனை என்றெல்லாம் நம்மைக் கேட்கிறவர்களைப் பார்த்து நானும் கேட்கிறேன், விடை கூறட்டும்' ஆந்திரர்கள் எப்பொழுதாவது திராவிடநாடு வேண்டாமென்று கூறியதுண்டா? பிரகாசம் பேசியிருக்கிறாரா? கோட்டி ரெட்டி கூறியதுண்டா? கேளப்பன் கேட்டதுண்டா? கோபால் ரெட்டி சொல்லியிருக்கலாம்—ஏனெனில் அவர் நாடாளும் மந்திரி!

மலையாளத்தார் ஏற்கவில்லையென்றே வைத்துக் கொள்வோம். அதனால் திராவிட நாடு பிரச்சினை இறந்து விட்டது என்றா அர்த்தம்? இல்லையே! மலையாளத்தாருக்கு நம் பிரிவினை முயற்சி புரியாததால் விரும்பாமலிருக்கலாம். அவர்களுக்குப் புரியவைக்கக் காலதாமதமாகுமே தவிர, பிரச்சினை எப்படி செத்துவிடும்?

## பாகிஸ்தானைப்பார்!

பாகிஸ்தான் வேண்டுமென்று ஜின்னா கூறியபோது யாரும் எளிதில் ஒத்துக்கொள்ளவில்லை. பாஞ்சால முதலமைச்சர், யூனியனிஸ்ட் கட்சித் தலைவர் சர். சிக்கந்தர் ஹயத்கான் எதிர்த்தார். சட்டசபையிலே கூட பாகிஸ்தான் கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. எல்லைப்புற மாகாணத்திலே கான்சாகேப் சட்டசபையிலே கூடாது என்று முழங்கினர். வெளியிலே கான் அப்துல் கபார்கான் எதிர்த்து பிரசாரம் செய்தார். சிந்துவிலே, பிரதமர் அல்லாபக்ஷ் எதிர்த்தார். வங்காளத்திலே பஸ்லுல் ஹக் முதலில் பாகிஸ்தானுக்கு விரோதியாகவே இருந்தார்.

## நம்பிக்கை இழக்கிறது!

டில்லி மந்திரிகளின் வருகையை கருப்புக் கொடி காட்டி வரவேற்பதன் வழியாக டில்லிக்குத் தங்கள் கண்டனத்தைத் தெரிவிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முயற்சியை ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட மக்கள் சர்க்கார் அடக்குமுறைகளால் தடுக்க முற்படுவது மக்களின் சாதாரணமான அடிப்படை உரிமைகளைப் பறிப்பதாகும்.

கண்டனத்தைத் தெரிவிக்க கருப்புக் கொடி காட்டவேண்டுமென்பது கழகத்தின் திட்டம். அத்திட்டம் டில்லி மந்திரி திவாகரின் வருகையின்பொழுது செயலாற்றப்பட்டது. ராஜாஜி வந்த பொழுதும் கழகம் அதைத்தான் செய்தது. திராவிட மக்கள் திரளாகச் சேர்ந்து கருப்புக் கொடிகள் கையிலேந்தி மந்திரியின் வருகையை எதிர்பார்த்து நின்றனர். மக்கள் கூட்டத்தை மந்திரி ராஜாஜி காண முடியாதபடியும் மக்கள் மந்திரியைப் பார்க்க முடியாதபடியும் சென்னை சர்க்காரின் போலீஸ் படை குறுக்கே நின்று தடுத்துவிட்டது. குழந்தைகளும் தாய்மார்களும் முதியவர்களும் குழுமி நின்ற கூட்டத்தை போலீஸ் படை தடியடிப் பிரயோகம் நடத்திக் கலைத்துவிடக் கச்சை கட்டிவிட்டது. எதேச்சாதிகார ஆட்சியில் இக்கொடுஞ் செயல் எதிர்பார்க்கக் கூடியதுதான். ஆனால் மக்கள் சர்க்கார் என்ற பெயரால் அதிகாரம் பெற்றுள்ள காங்கிரஸ் ஆட்சியில் இதுபோன்ற தடியடி தர்பார் நடைபெறுவது காங்கிரஸிடம் மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையை இழக்கச் செய்யவே பயன்படும் என்பதை எடுத்துக் காட்டுவதாகும்.

"நண்பன்"
6—11—50ல்.

பாகிஸ்தான் பகுதியைச் சேராத பம்பாயிலே இருந்த ஜின்னா, ஐக்கிய மாகாணத்திலே லியாகத் அலிகான் பாகிஸ்தானின் பகுதிகளான சிந்து, பஞ்சாப், எல்லைப்புறம், வங்காளம், ஆகிய பகுதிகளை எதிர்த்தும், ஹயத்கான், பஸ்லுல் ஹக், கான் சகோதரர்கள் போன்ற பாகிஸ்தான் எல்லைக்குள்ளே வாழ்ந்த பெருந்தலைவர்கள் மறுத்தும் பாகிஸ்தான் கிடைத்தது. திராவிடத்திலே வாழ்கிற நம்மால், திராவிட நாட்டை ஏன் பெற முடியாது?

## 'காப்பி'யடிக்கிறோமாம்!

பாகிஸ்தானைப் பார்த்து நாம் 'காப்பி'யடிக்கிறோமாம் — 'கனம்கள்' கூறுகிறார்கள்! அவர்கள் விளக்கத்திற்காக அல்ல, இங்கே கூறுவது, முன்னரே பல முறை எடுத்துக் கூறியதை மீண்டும் ஒரு முறை கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

1939-ல் திருவாரூரில் கூடிய ஜஸ்டிஸ் கட்சி மாநாட்டில்தான் தமிழ்நாடு தமிழருக்கே என்று தீர்மானம் போட்டோம். நாம் எல்லோரும் திராவிடர் என்றே சர்க்கார் ஜனத்தொகை ரிகார்டுகளில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்றும் தீர்மானித்தோம். அதாவது லாகூர் தீர்மானம் உருவாவதற்கும் முன்னாலேயே நாம் நாட்டுப் பிரிவினை கோரியிருக்கிறோம்.

பம்பாய்க்கு சென்றிருந்த நம் நண்பர் பி. பாலசுப்பிரமணியம், ஜின்னாவைக் கண்டு பேசிய பொழுது, தமிழ் நாட்டுப் பிரிவினையைப் பற்றிக் கூறினார். அப்பொழுது அவர் நாங்களும் அத்தகைய தீர்மானம் ஒன்று போடலாம் என்றிருக்கிறோம் என்று குறிப்பிட்டார். அந்த சமயத்தில் அவர் 'விடுதலை' நிலயத்திற்கு இதுபற்றிக் கடிதம் எழுதியிருக்கிறார். ஆகவே, 'காப்பி'யடிக்கிறோம் என்று அர்த்தமற்ற முறையில் உளற வேண்டாம்.

## நம்பிக்கையிருந்தால்......!

திராவிட நாடு வேண்டுமென்று சிலர் பேசுகிறார்கள்—அதுவும் அது சின்னஞ் சிறு நாடு. தனித்து வாழமுடியாத நாடு என்கிறார்கள் சிலர். சின்னஞ் சிறு நாடில்லை திராவிட நாடு, மற்ற உலக நாடுகளைப் பார்க்கும்பொழுது! சிறு நாடென்றே வைத்துக் கொள்வோம். இருந்தால் என்ன? ஒரு நாட்டின்மீது மற்றொரு நாடு ஆதிக்கம் செலுத்தக் கூடாது என்பதற்காகவே ஐக்கிய நாட்டு சபை அமைக்கப்பட்டுள்ளது. இதில் நாணயமான நம்பிக்கை யிருக்குமானால் சிறு நாடு, பெரிய நாடு என்ற பேச்சே கூடாது.

வீதி வழியே ஒரு பலசாலி வரும் பொழுது, அவன் நம் எதிரியோ, அக்கிரமக்காரனோ என்ற சந்தேகம் ஏற்படும்பொழுது பயம் உண்டாகும். சிறுநாடுகளுக்கு, பெரிய நாடுகளைக் கண்டு பயம் ஏற்படலாம்—எப்பொழுது? பெரிய நாடுகளுக்கு நாடு பிடிக்கும் எண்ணம் இருக்கும்வரை! உள்ளொன்று வைத்து புறமொன்று பேசிடுவோரே இப்படி சிறியநாடு, பெரியநாடு என்று பேசுவர்.

நான் கேட்கிறேன்—இப்பொழுது ரஷ்யா, இந்தியாவின்மீது படை யெடுத்தால், இந்தியா சமாளிக்க முடியுமா, அமெரிக்காவின் துணையில்லாமல்? பெரிய நாடுதானே, இந்தியா! முடியுமா, படையெடுப்பைத் தாங்க?

## இமயத்தில் புலிக்கொடி

சீனாவின் முதல்வன் மாசேதுங் துணிவோடு சொல்கிறானே, இமயத்திலே எங்கள் செங்கொடி பறக்கும் என்று! திபேத் பற்றிய இவர்கள் அறிக்கையை அலட்சியப்படுத்தியது மட்டுமல்ல, இந்தியப் படைகள் வெளியேற வேண்டும் என்று திடமாக கூறிவிட்டாரே!

திராவிட நாடு மட்டும் தனியாக இருந்திருந்தால், நாங்கள் கூறியிருப்போமே, இமயத்தின் மீது எங்கள் புலிக்கொடி பறந்திருக்கிறது என்று! மாசேதுங் கூறியபொழுது வாயடைத்துத்தான் இருந்தீர்கள்! நேருவின் கையில் இமய முதல் குமரி வரை உள்ள இந்தப் பெரிய உபகண்டத்தையே கொடுத்திருக்கிறோம். யுத்த மந்திரியின் பெயரே பலதேவ் சிங்—இருந்தும் வாய்மூடியிருக்கிறார்கள்!

## முதலாளித்துவ வேட்கை

முதலாளித்துவம் கேட்க வேண்டும், பெரிய நாடு தேவையென்று! ஏகாதிபத்திய வாதிகள் பெரிய நாடு வேண்டும் என்பதற்குப் பின்னணி பாடவேண்டும். பெரிய நாடாக இருந்தால் முதலாளிக்கு ஒரு லைசன் ஸால் பெரிய வியாபாரம் செய்ய முடியும்—பெரிய மார்க்கட் கிடைக்கும், முதலாளி பெரிய பங்களாவைத் தேடுகிறான், குடியிருக்க!—பெரிய மார்க்கட்டை நாடுகிறான், வியாபாரம் செய்ய! இந்தியா மூன்றாகப் பிரிந்தால் மூன்று லைசன்ஸ்கள் தேவை. ஆகவே திராவிட நாடு பிரிகிறதென்றால் முதலாளித்துவம் முணு முணுக்கலாம். ஏகாதிபத்தியம் நாடு பிடிக்கும் ஆசையிருப்பதால் துடி துடிக்கலாம்! மற்றவர்கள் பதைப்பதேன்?



திராவிடநாடு பிரிந்து தனித்திருக்கும்பொழுது அந்நிய நாடு படையெடுத்தால், உலக நீதிமான்கள் தூங்குவார்களா? அவர்களிடம் நம்பிக்கையில்லையா? கொரியாவிலே நடப்பதை நாம் அறிய மாட்டோமா? பாகிஸ்தான் பார்த்திருக்குமா? இந்துஸ்தான் எனக்கென்னவென்று இருந்து விட முடியுமா? ஐக்கிய நாட்டு சபைதான் ஏன்?

பின், ஏன், ஐந்துகண்ணன் பிடித்துக் கொள்வான், மூன்றுகண்ணன் கடித்துவிடுவான் என்று குழந்தைகளுக்குக் கூறுவதுபோல கூறிப் பயம் காட்டவேண்டும்?

## வீரமில்லையே, அன்றும், இன்றும்!

வடநாட்டினருக்கு என்றுமே வீரமிருந்ததாகச் சரித்திரம் கூறவில்லை. இந்து தேச சரித்திரத்தைப் படித்துப் பாருங்கள்.

அலக்சாந்தர் வந்தான். அடி பணிந்தனர். கோரி வந்தான். கும்பிட்டனர். கஜினி வந்தான். காலடியில் வீழ்ந்தனர். தைமூர் வந்தான். பணிந்தனர். இப்படி வந்தவருக்கெல்லாம் மண்டியிட்டதாகத் தானே சம்பவங்கள் உள்ளன. வடநாட்டிற்கு அன்றும் வீரமில்லை—இன்றும் வீரமில்லை.

இப்பொழுது காஷ்மீரிலே பார்க்கிறோமே! காஷ்மீரம், இந்தியப்பிரதமர் நேருவின் தாயகம். இந்துப்பண்டிதர்கள் ஏராளம் வாழுமிடம். நேரு, தன்குடும்பத்துடன் மாதமொரு முறை சென்று வரும் இடம். அது மட்டுமா? அவரிடம் படையிருக்கிறது, ஆயுதங்கள் உண்டு, நாளைக்கு இத்தனை கோடி செலவாகிறது என்று பட்டியல் காட்டுகிறார்கள். இருந்தும் சொல்கிறார்கள் — பாகிஸ்தான் படையினரிடம், காஷ்மீரின் ஒரு பகுதி இருக்கிறதென்று! பாகிஸ்தான் படைகள் மளமளவென முன்னேறுகின்றன, முறியடிக்கின்றன என்று துளியும் வெட்கமில்லாமல் இந்நாட்டு பத்திரிகைகள் எழுதுகின்றனவே!

வீரமில்லா வடநாட்டோடு ஒட்டிக்கொண்டிருப்பதால் திராவிடத்திற்கு என்றுமே ஆபத்து தானே! அதனால் இன்பம் ஏதும் இல்லையே!

## புல்லைத் தின்னென்றான்!

இந்த காங்கிரஸார் ஆட்சிக்கு வந்து மூன்றாண்டுகளாகிவிட்டன. இன்னமும் உணவு, உடை கல்வி எதிலுமே வசதியான நிலை ஏற்படுத்தித் தர முடியவில்லை.

ஆண்டு ஏற, ஏற, கொடுக்கும் அரிசியின் அளவுதான் குறைந்து வருகிறது. பதினாறு பனிரண்டாகி, பத்தாகி, எட்டாகி, ஏழாகி, இன்று ஆறாகிவிட்டது!

அரிசிக்குப் பதில் கோதுமை, காய்கறிகள், அதுவும் இல்லையென்றால், பருத்திக்கொட்டை புளியங்கொட்டை சாப்பிடுங்கள் என்று சொல்கிறார்கள் மந்திரிகள்.

இப்படித்தான் அன்றொருநாள், பிரஞ்சு நாட்டிலே ஒரு புல்லன்—அவன் ஒரு கவர்னர், ரொட்டிக்கிடைக்கவில்லையே என்று கேட்ட மக்களிடம் புல்லைத் தின்னுங்கள் என்று கூறினான், அகம்பாவத்தோடு! கொடுங்கோலர்கள் தாங்கள் வீழ்ச்சியடைவதற்கு முன்னால் அபார தைரியத்துடனிருப்பாராம். அப்படித்தான் அவன் அகங்காரத்தோடு பேசினான்.

ஆனால் புரட்சியின்போது அவனைக் கொல்லத் துடித்த கூட்டத்திற்கிடையிலே நின்ற ஒருவன், 'கொல்லாதீர்கள் இவனை, நில்லுங்கள்' என்றான். 'பொல்லாதவனாயிற்றே இவன். நல்லவர்கள் இவனை நடமாட அனுமதிக்கமாட்டார்களே — இவனையா கொல்லவேண்டாம் என்கிறாய்' என்று கேட்டனர், கூடியிருந்த கூட்டத்தினர் 'இதோ வருகிறேன்' என்று ஓடினான், ஓடினான்! திரும்பி வந்தான் ஒரு புல் கட்டோடு—அவன் வாயிலே புல்லை வைத்து, 'மெல்லடா' என்று மிரட்டினான். 'இனிக் கொல்லுங்கள்!' என்று கூவினான். அவரை வெட்டினர் மக்கள். அவர்களின் வேகம் தணிந்தது.

இப்பொழுது புளியங்கொட்டையைத் தின்னச் சொல்லும் மந்திரிகளுக்கு எதிர்காலத்தில் இந்த நிலை வரவேண்டும் என்று கூறவில்லை. நான் கூறுவது சரித்திர புத்தகத்திலே ஒரு ஏடு! அந்த கதி இவர்களுக்கு வரக்கூடாது என்பது நமது ஆசை.

நாம் இப்படிக் கூறுவதால், நம்மை ஒழித்துவிடப் பார்க்கிறார்கள். சிறையிலே போடுகிறார்கள். தடியடி தருகிறார்கள். ஆனால் ஒன்று சொல்வேன், இந்த சர்க்காருக்கு — நாங்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும், பேசினாலும், பேசாவிட்டாலும் எங்கள் இயக்கம் இருக்கும். அழிந்துவிடாது என்பதைமட்டும் நினைவில் வையுங்கள்! இன்று சர்க்காரின் நிலை மாறியிருக்கிறது. அவர்களின் அலட்சியம் மாறி, அடக்கிவிடலாமா என்ற முயற்சியிலே ஈடுபட்டுள்ளனர். இதிலேயும் அவர்கள் அடையப்போவது தோல்விதான். இதுமட்டும் உறுதி.

## மாணவர்களே!

மாணவமணிகளே, திராவிடத்தின் நிலம், நீர், எல்லை—அளவு, வளங்களை நன்றாகக் கணித்துக் கொள்ளுங்கள். நாட்டோரிடம், நல்லமுறையில் பிரச்சாரம் செய்யுங்கள். ஆறுகள், சுரங்கங்கள், கனிப்பொருள்கள், வேறுபல வளங்களை புள்ளி விவரங்களோடு சேகரியுங்கள். எங்களுக்கு அவைகளைச் செய்ய ஓய்வில்லை! அதற்காக எங்கள் பக்கதுணையாக இருந்து பணியாற்றுங்கள். பூகோளப் படங்களைத் தேடுங்கள் — இந்தியாவிற்குள் எத்தனை பிரான்ஸ், எத்தனை ஜெர்மனி, எத்தனை ஸ்பெயின் நாடுகள் உள்ளன என்று காட்டுங்கள்.

பாகிஸ்தான், இந்துஸ்தான் ஆகிய நாடுகள் பிரிவதற்கு முன்னாலே பாகிஸ்தான் பகுதியிலே உள்ள மாணவர்கள் அங்கு விளையும் பருத்தி, சணல், கோதுமை, விளைவுகளைப்பற்றி புள்ளிவிவரங்களோடு தெரிந்து, மக்களுக்குச் சொல்லி வந்தனர். அதுபோல நீங்களும் திராவிடம் பிரியுமுன் பெரும் பணியாற்றுங்கள்.

கல்வி பயிலும் காளைகளே, நாட்டுமக்கள் மனத்தை பக்குவப்படுத்துங்கள். அறியாமையை ஓட்டுங்கள். மூட எண்ணங்களை விரட்டுங்கள். அதற்கு ஏற்றமுறையில் உங்கள் அறிவாற்றலை வளர்த்துக்கொள்ளுங்கள்.

நாட்டுப் பிரிவினைப் போராட்டத்திற்கு, மக்களைத் தயார் செய்யுங்கள். நமக்குத் தனியான சரித்திரம், தெளிவான ஆட்சி பரம்பரை இல்லை. எனினும் புகழோடு வாழ்ந்த இனத்தின் வழி வந்தோர் நாம். நீங்கள் நாட்டின் நல்ல தொண்டர்களாக விளங்குவீர்கள் என்ற நம்பிக்கை தரும் மகிழ்ச்சியோடு, பூரிப்போடு, மாநாட்டைத்திறந்து வைக்கிறேன்" என்று கூறிமுடித்தார்.

## நடக்க இருப்பவை

போளூர்:- 19—11—50 அன்று தோழர் ஈ. வி. கே. சம்பத் சொற்பொழிவாற்றுவார்.

சோழமூர்:- குடியேற்றம் தாலுக்காவைச் சேர்ந்த மேற்படியூரில் 19—11—50 அன்று தி. மு. க. பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் வி. எ. துரைபாசு, வி. எ. சருல், வி. எ. தத்தப்பன் பேசுவர்.

வாணியம்பாடி:- 19-11-50 முல்லைக்கொம்பை தோழர் வடிவேல் தலைமையில் தோழர்கள் சி. பி. சிற்றரசு, இரா. நெடுஞ்செழியன் பேசுவர்.

குடியேற்றம்-: 20—11—50; திக்கட்டிமுலை மாலை தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., பேசுவார்.

செங்கற்பட்டு
மாவட்ட செயற்குழுக் கூட்டம்

19—11—50 ஞாயிறு காலை 10-மணிக்கு திராவிடநாடு நிலயத்தில் செங்கற்பட்டு மாவட்டசெயற்குழுக் கூட்டம் நடைபெறும். செயற்குழு உறுப்பினர்கள் இதையே அழைப்பாகக்கொண்டு வரவேண்டுகிறேன்.

சி. வி. எம். அண்ணாமலை.

# போரணிவகுத்து புறப்பட்டனர் மாணவர்

## நடமாடும் 'எதிர்காலம்' நாம்

## "தரணி ஆளுவோமென பரணி பாடு"

## போரிடுவோம்! வெற்றி பெறுவோம்!

### மதியழகன் வரவேற்புரை

ஆயிரமாயிரமாக, சென்னை செயிண்ட்மேரி மண்டபங்கொள்ளாது நிறைந்து வழிந்துகொண்டிருந்த மாணவ மணிகளையும், திராவிட இயக்க வீரர்களையும், வீராங்கனைகளையும் பெருமகிழ்ச்சியோடு, வரவேற்றார் மாநாட்டின்வரவேற்புக்குழுத் தலைவர் தோழர் கே. ஏ. மதியழகன் பி. ஏ., அவர்கள். அவர் ஆற்றியவரவேற்புரைச் சுருக்கம் இது.

"திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மாநாட்டிலே மாகாணமெங்குமுள்ள கல்லூரிகளின் பிரதிநிதிகளாக நீங்கள் கூடியிருக்கிறீர்கள். கலைக்கல்லூரிகள் என்றில்லாமல் இன்ஜினியரிங்கல்லூரி, மெடிகல் கல்லூரி, சட்டக்கல்லூரி, புலவர் கல்லூரி, தொழிலியற் கல்லூரிபோன்ற கல்லூரிகளின் நூற்றுக்கணக்கான பிரதிநிதிகளை என்கண் முன்னே காண்கிறேன். இப்படி சகலரும் கூடியுள்ள இந்த மாநாட்டின் முக்கியத்துவத்தை உணர்கிறேன்.

இந்த மாநாட்டின் அவசியம்வேறு என்றைக்கும் இல்லாத அளவிற்கு இன்றையதினம் ஏற்பட்டிருக்கிறது. நாட்டின் நிலையிலும் சரி, மாணவர்களாகிய நமது நிலையிலும் சரி, நானாவிதமான நெருக்கடிகள் குவிந்துகிடக்கின்றன. அவைகளுக்கெல்லாம் பரிகாரம் தேடும் பாசறையாக இம்மாநாடு அமையும் என் மனதார நம்புகின்றேன்.

திராவிடமாணவர் இயக்கம் கடந்த ஆறு, ஏழு ஆண்டுகளாக மட மடவென வளர்ந்திருக்கிறது. மாணவர்களுக்கு நாட்டுப்பற்றை வளர்ப்பதில், சமுதாயத்திலே நிலவிவரும் குருட்டு நம்பிக்கைகளை தூள் தூளாக்கி பகுத்தறிவுள்ள சமுதாயத்தை உருவாக்குவதில தனது பெரும் பணியைச் செய்திருக்கிறது. கடந்த சில மாதங்களுக்கு முன் சென்னை உயர்நீதிமன்றம் கம்யூனல் ஜீ. ஓ. சட்டவிரோதமானது என்று தீர்ப்பு அளித்தவுடன், கம்யூனல் ஜி. ஓ. ஒழிந்தால் இந்நாட்டுப் பெருங்குடி மக்களின் பிள்ளைகளுக்கு விமோசனமில்லை. எனவே சுப்ரீம் கோர்ட்டிற்கு அபீல்செய், சட்டத்தை திருத்து என்று சென்னை அரசாங்கத்தை வேண்டி மாகாணமெங்குமுள்ள கல்லூரிகள் செய்த வேலை நிறுத்தங்களும் கண்டன நடவடிக்கைகளும் நமதுவிழிப்புணர்ச்சிக்கும் காருத்து பெற்றிருக்கும் செல்வாக்கிற்கும் அருமையான எடுத்துக்காட்டு என எண்ணுகிறேன்.

வலிமை பொருந்திய வல்லரசாகிய வெள்ளைக்கார ஏகாதிபத்தியத்தின் காலடியிலே நமது நாடு சிக்கிச் சீரழிந்த நேரத்தில் நாட்டின் விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட்டிருந்தோம். அந்த போராட்டத்திலே நம்மிலே பலரைச் சிறைச்சாலைக்கு அனுப்பியிருக்கிறோம். போலீஸ் தடியடி தர்பாருக்கு பலியிட்டிருக்கிறோம். இளமையான எழில் மலர்கள் பல கசக்கி எறியப்பட்டிருக்கின்றன. தியாகத் தழும்புகள் பலரது உடம்பிலே ஏறியிருக்கின்றன. பலரின் சிவந்த இரத்தத்தால்சுதந்திரக் கொடிக்குவர்ணம் பூசினோம். இப்படிப்பட்ட தியாகத்திற்குப் பிறகு பெற்ற சுயராஜ்யத்தால் சுகராஜ்யம் உதயமாகும், நாடு செழிக்கும், அறிவு வளரும் அடக்குமுறை அழியும், வேதனை தொலையும்—ஆனந்தம் பொங்கும் என்று நம்பினோம். ஆனால் பெற்ற சுயராஜ்யம் நமக்கல்ல. வேறு ஒரு ஏகாதிபத்தியம் வெள்ளையன் இருந்த இடத்திலே அமர்ந்து திராவிடத்திற்கு அடிமைச் சங்கிலி பூட்டியிருக்கும் காட்சி தென்பட்டது. எனவேதான் திராவிட மாணவர்கள் திகைப்பு நீங்கி தெளிவு கொள்ள ஆரம்பித்தார்கள். தங்கள் பயணத்தில் மற்றுமொரு விடுதலைப் போராட்டம் இருக்கிறது என்பதை மனதில் பதியவைத்தனர். தாங்கள் யார்? தங்கள் வரலாறு என்ன என்ற கேள்விக் குறிகள் தோன்றின. விடை கிடைத்தது திராவிடம் நமது தாயகம் என்று. கூர்ந்து கவனித்தனர். நமது மூதாதையரின் வீரம், நமது தனிக் கலாச்சாரத்தின் மாண்பு, நமது மொழிகளின் தனிச் சிறப்பு கலை, இலக்கியங்களின் அருமை பெருமைகள், வரலாற்றின் தன்மை இத்தனையும் கவனத்திற்கு வந்தது. ஆகவேதான் நாட்டை மீட்டு திராவிடக் குடியரசை நிறுவுவது என்ற புனிதமானபோராட்டத்திலே திராவிட மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர். "திராவிட நாடு திராவிடருக்கே" என்ற இலட்சிய கீதத்தை இதயத்திலே தாங்கியுள்ள இளைஞர்கள் அதற்காக எந்த விலையும் கொடுக்கத் தயாராகிவிட்டார்கள். அவர்களது அந்த ஆர்வத்தை உலகின் எந்த சக்தியாலும் தடுக்க முடியாது என்று ஆளவந்தாருக்கு எச்சரிக்க விரும்புகின்றேன்.

இந்த மாநாடு கவலை செலுத்தவேண்டிய சில பிரச்சனைகளை உங்கள் கவனத்திற்கு வைத்து எனது உரையை முடிக்கலாம் எனக் கருதுகின்றேன். நம்முடைய நாடு ஜனநாயக நாடு என்று தம்பட்டம் அடிக்கிறார்கள் ஆளவந்தார்கள் ஆனால் நாட்டின் நிகழ்ச்சிகள் அத்தனையும் சர்வாதிகாரத்திற்குச் சாமரம் வீசுவதாகவேயுள்ளது. எண்ண உரிமை, எழுத்துரிமை, பேச்சுரிமை கேலிக்கூத்தாக்கப்பட்டிருக்கிறது பிரஜா உரிமைகள் குழிதோண்டிப் புதைக்கப்படுகின்றன. புத்தகங்கள் பறிமுதல், கூட்டங்களுக்கு 144, நாடகங்கள் ஆடக்கூடாது, என்ற இப்படிப்பட்ட அடக்குமுறை அநியாயங்களைச் செய்வதில் முன்செல்கின்றனர் ஆட்சியாளர்கள். ஜனநாயகத்தில நம்பிக்கைகொண்ட, ஜனநாயகத்தின் இலட்சணம் தெரிந்த உங்களைக் கேட்கிறேன் இவைகளை நீங்கள் சகித்துக் கொள்வீர்களா என்று! சென்ற சில தினங்களுக்குமுன் சட்டப்படி அங்கீகரிக்கப்பட்ட கருப்புக்கொடி காட்டும் காரியத்திற்காக கோட்டை வெளியிலே கூடியிருந்த திராவிடத் தாய்மார்களை, வாலிபவீரர்களை மிருகத்தனமாக தடியடிப் பிரயோகம் செய்து வெறிநாயகளைப் போல அடித்தார்களே இதை ஜனநாயக சர்க்கார் என்று எப்படி நாங்கள் ஒத்துக்கொள்வது? 144 தடையுத்தரவை மீறப்போவதாகக் கூறப்பட்ட சின்னஞ்சிறு ஊர் குன்றத்தூரிலே வெட்டுமுறை துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது இரத்தக் குறைத்தனத்திலே! அடக்குமுறை தலைவிரித்தாடும் ஆணவ அரசாங்கமே! இவைகளுக்கு என்ன சமாதானம் சொல்கிறாய்? நீ சொன்னாலும் சொல்லாவிட்டாலும் இவைகளை எங்கள் ஞாபகத்திலே வைத்திருப்போம். அருமை மாணவர்களே! இந்த போலீஸ் தர்பாருக்கு எதிராக கண்டனக்குரல் எழுப்பவேண்டும்நீங்கள் ஜனநாயகம் கற்றவர்கள். உலக வரலாறு தெரிந்தவர்கள், நாகரிகங்களை உணர்ந்தவர்கள், இந்த இருபதாம் நூற்றாண்டிலே விஞ்ஞான காலத்திலே நாம் வாழும் ஜனநாயக நாட்களிலே இங்குள்ள கொடுமைகள், அக்ரமங்கள், அநீதிகள், ஜாதிபேதங்கள், மூடநம்பிக்கை, அறியாமை, தரித்திரம் இந்த துர்பாக்கிய நாட்டைத் தவிர வேறு எங்காவது மாநிலத்திலே உண்டா? வெட்கமும் வேதனையும் உங்களை அரிக்கவில்லையா? இவைகளைத் தரைமட்டமாக்கும் முயற்சியின் தளகர்த்தர்கள் ஆகவேண்டும் நீங்கள். உங்களைத் தவிர வேறுயார் இருக்கிறார்கள் இந்த மகத்தான காரியத்தைச் செய்ய சீன நாட்டின் சீரமைப்புக்கு உதவியது உங்களைப் போன்ற மாணவர் பட்டாளந்தான் எகிப்து நாட்டிலே ஏகாதிபத்தியத்தின் பிடரியைக் குலுக்கி எழுச்சியை உண்டுபண்ணியவர்கள் இளைஞர் கூட்டந்தான். சோவியத் நாட்டின் சோபிதத்திற்கு, லெனினின் கனவு நனவானதற்குக் காரணம் ரஷ்யநாட்டு மாணவர் சேனை அவர்கள் யாருக்கும் இளைத்தவர்களல்ல! நீங்கள் உங்களிலே தேங்கிக்கிடக்கும் சக்தியை பயன்படுத்தினால் நீங்கள் அடையமுடியாதது இல்லை.

நாட்டின்நிலை இப்படியென்றால் கல்வி நிலையோ இன்னும் மிகமிக மோசமாகவுள்ளது. இவற்றிற்கெல்லாம் ஓர் விமோசனம் வேண்டும். கல்லூரிகளில் உள்ள இட நெருக்கடி சொல்ல முடியாது. ஆண்டுதோறும் கல்லூரி திறக்கிற நேரத்திலே இடந்தேடுவதற்கான கல்லூரித் தலைவரின் அறைவாயிலிலே நிற்கும் நமது பெற்றோர்களின் வேதனைக் காட்சி எனது மனதை உருக்குகிறது. ஏற்கெனவே தற்குறி நாடு. ஆனால் படிக்க விருப்பமிருந்தும் இடங்கிடையாது. எவ்வளவு வேதனை நிறைந்த விசித்திரம். எதெதற்கோ கொட்டியழும் சர்க்கார் கல்வி நிலையங்களை நிறுவுவதில் கவனம் செலுத்து நிலைமை முற்றுமுன்னம் பரிகாரம்தேடவேண்டும் திராவிட மாணவர்களுக்கு பேருபகாரம் செய்துவரும் கம்யூனல் ஜி. ஓ. முறை தொடர்ந்து இருக்கவேண்டும் என்பதை இம்

(12-ம் பக்கம் பார்க்க)

## கவிமணிக்கு : : : : பொன்னாடை

—✲—

தமிழகத்தின் தனிப் பண்பை வெளிப்படுத்தும் அரியதொரு பெருவிழா சென்றவாரம் நாகர் கோவிலில் நடந்தது. பாவலரை, நாவலரைப் பாராட்டும் பெருங்குணங் கொண்ட காவலர்களே, பண்டைத் தமிழகத்திலே வாழ்ந்தனர். பாணர், புலவர், சிற்பிகள், ஓவியர், காவியமியற்றுவோர் என்று அறிவுத் திருவுருவங்கள் எல்லாம், தங்கள் புலமை காட்டி பரிசில் பெறாத நாளில்லை இங்கு புலவரைப்போற்றாத புரவலர்களேஇல்லை. தமிழக வரலாற்றிலே இது குறிப்பிடவேண்டிய ஒன்று!



பாரதியாருக்கு மண்டபங் கட்டி, தங்கள் கடமையுணர்ச்சியைக் காட்டிக் கொண்டனர்.

புரட்சிக் கவி பாரதிதாசனுக்கு பொற்கிழி அளித்தனர்—பொன்னாடை போர்த்தி மகிழ்ந்தனர். நாமக்கல்லாருக்கு நிதி தந்தனர் — பெரும் பதவி தந்து பாராட்டினர்.

அதுபோலவே, நாகர்கோவிலிலே உள்ள சரஸ்வதி மகாலில் தோழர் சர். ஆர். கே. சண்முகம் அவர்கள் தலைமையிலே கூடி, கவிமணி தேசிகவிநாயகம் அவர்களுக்கு பொன்னாடைபோர்த்து விழா நடத்தினர்.

தமிழகத்தின் பலபகுதிகளிலிருந்தும் ஆயிரக் கணக்கான தமிழன்பர்கள், தமிழ் அறிஞர்கள், மொழியார்வலர்கள் குழுமியிருந்து விழாவைச் சிறப்பித்தனர். தோழர்கள் டி. கே. சி., சா. கணேசன், கோவை. சி. எஸ். இரத்தினசபாபதியார், சர். பி. டி. ராஜன், மா. பொ. சிவஞானம் ஆகியோர் கவிஞரைப் பாராட்டிப் பேசினர்.

5-ம் பக்கத் தொடர்ச்சி

### போலீஸ் படை

நாட்டின் அமைதியைக்காக்க,சமாதானத்தை நிலைநாட்ட போலீஸ் ஸ்தாபனம் ஏற்பட்டது. கொலை செய்தவர்களை கண்டுபிடிக்க, கொலை செய்யத் தூண்டியவர்களைத் துப்பறிந்து சிறைப்படுத்த, திருடனைத்தேட, வழிபறி கொள்ளையடிப்பவனை தடுக்க, கள்ளக் கையொப்பமிட்டவனை, வஞ்சித்தவனை, ஏமாற்றியவனை — இன்னும் குற்றமிழைப்பவர்களை பிடிக்கத்தான் இந்த ஸ்தாபனம் நிறுவப் பட்டது.

மாவட்டங்களிலே ஏற்படுகிற குற்றங்களையும் கணக்கிடுங்கள். அதனைக்கண்டு பிடிக்கிற கணக்கினையும் பாருங்கள். குற்றப்பட்டியல் நீளும். குறையாது. மாகாணத்தின் கணக்கையே பார்த்தாலும் குற்றங்கள் குறைந்துகொண்டே போகின்றன என்று யாரும் சொல்லிவிடமுடியாது.

உதாரணமாக, வேலாயுதம்என்ற ஆசிரியர், நம் இயக்கக் கருத்துகளைப் பரப்பினார் என்ற காரணத்திற்காக, தூக்கிலே தொங்கவிடப்பட்டார். இந்த கொலை நாடறிந்தது. நாம் அந்தக்கோரக்கொலையை ஒவ்வொருவர் உள்ளத்திலும் தைக்குமாறும் பிரசாரத்தின்மூலம் பரப்பி வந்தோம். அந்தக்கொலை வழக்கிலேயே குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கமுடியவில்லை. இதுவே இந்நிலை அடைந்ததென்றால், சாதாரண கொலைகளில் இந்தப் போலீசார் எப்படி நடந்துகொள்வார்கள்பாருங்கள். இது எதைக் காட்டுகிறது? போலீஸ் நிர்வாகத்தின் திறமைக் குறைவைத்தானே விளக்குகிறது!

### போலீசுக்கு புதுவேலை!

இதற்குக் காரணம் போலீஸ் ஸ்தாபனம் அல்ல—அதனை ஆட்டி வைக்கும் காங்கிரசாட்சி! அவர்களுக்குரிய வேலைகளை விடுத்து வேறு வேலைகளில் ஈடுபடுத்துகிறார்கள். இப்பொழுது ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷன்களில் உள்ளே சென்றால் சிரிப்பு வருகிறது. அங்கே 'கேடிகளின்'படங்களைக்காணோம். இந்நாட்டினைச் சூழ்ந்துகிடக்கும் கேடுகளை ஒழிக்கப் பாடுபடும் தீரர்கள், எழுத்தாளர்கள், பேச்சாளர்கள் படங்களைத்தான் பார்க்கிறோம்.

பத்துநாட்களுக்கு ஓய்வு கிடைத்ததேஎன்று உத்தியோகஸ்தர்கள் — வீட்டைப் பூட்டிவிட்டு வெளியூர் செல்லமுடியவில்லை. திரும்பிவந்து பார்த்தால் திறந்துகிடக்கும் கதவுகளும் உடைந்துபோனஜன்னல்களும்தான்மிச்சமாகஇருக்கின்றன பாதுகாப்பு வேலை அவ்வளவு பக்குவமாக நடக்கிறது!

போலீசாரைக் குறைகூறிப்பயனில்லை. அவர்கள் நாட்டிலே நடமாடும் எதிர்க்கட்சிதோழர்களை தேடவும், அவர்கள் கூட்டங்களைக் கலைக்கவும், தடியடி தரவும், சுடவும்தான் நேரமொதுக்கப்பட்டுள்ளது. மந்திரிகள் வந்தால் அவர்கள் பேசுமிடங்களில் ஜனமில்லாத குறையைப்போக்கவும் தான் போலீஸ்சார் இன்று பயன்படுத்தப்படுகிறார்கள்.

### சுயராஜ்யமா?

வெள்ளைக்காரர்கள் பெரும் கொள்ளைக்காரர்கள் என்று சொன்னார்கள். அவர்கள் இந்த நாட்டை இருநூறு ஆண்டுகள் ஆண்டார்கள். அவர்கள் கொடுமைக்காரர்கள் என்று இந்த நாட்டுக் காங்கிரசாரால் வருணிக்கப்பட்டவர்கள். அவர்கள் போட்ட 144-களை கணக்கிடுங்கள். இந்தக் காங்கிரசார் ஆட்சிக்கு வந்து மூன்றாண்டுகள் தானாகின்றன. அதற்குள் இவர்கள் போட்ட 144 தடையுத்தரவுகளை எண்ணுங்கள். அதுபோலவே அன்று நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகங்களை கணக்கிடுங்கள். இன்று நடந்து வருவனவற்றையும் கணக்கிட்டு ஒப்பிடுங்கள். நிச்சயமாகச் சொல்வேன் வெள்ளையர் காலத்தைக் காட்டிலும் மூன்று, நான்கு மடங்கு அதிகமென்றே கூறுவேன். இதுதான் இன்றைய சுயராஜ்யம்! இது சுயராஜ்யமா, ஜனநாயகமா என்று எண்ணிப் பாருங்கள்!




### சிறை, விலங்கு

புதிய புத்தகங்கள், நாட்டிலே ஏற்பட்டுள்ள இலக்கிய மறுமலர்ச்சியின் அறிகுறி. ஆனால் இங்கு புத்தகங்களுக்குத் தடை! எழுதியவர்களுக்கு சிறை! வெளியிட்டவர்களுக்கு தண்டனை, அபராதம்! இன்னும் சொல்லப்போனால், அரசியல் கைதிகளை விலங்கிட்டு வீதிகளில் இழுத்துச் செல்கின்றனராம். இதனால் நமக்கு இழுக்கு ஒன்றும் வந்துவிடவில்லை. இனிச் சிறை செல்லும் கள்ளன்கூட களிப்போடு செல்வான், அறிஞர் அண்ணா இருந்த சிறை, பெரியார் இருந்த சிறை என்ற பெருமிதத்தோடு. விலங்குகள் நம் தோழர்களின் கரங்களில் போடப்படுவதால் புதிய கௌரவம் பெறுகிறது. நாளைக்கு அதனை மாட்டிக் கொள்கிற சாதாரண கைதி, நாட்டுத் தொண்டர்கள் கரங்களில் கிடந்த விலங்குகள் என்று பெருமை பேசுவான். நம் தலைவர்கள், தங்கள் பிரவேசத்தால் சிறையை புனிதமாக்கி விட்டு வந்துள்ளார்கள். கௌரவம் இடத்தைப் பொறுத்ததல்ல — ஆளைப் பொறுத்தது — ஒரு நடவடிக்கைக்கே, தனிப்பட்ட கௌரவமோ, அகௌரவமோ கிடையாது!

### நம் பொறுப்பு

நம் பொறுப்பு வளர்ந்து கொண்டிருக்கிறது. இந்நாட்டு மக்களுக்கு ஏற்ற நல் திட்டங்களை பரப்புவது மட்டுமல்ல, நின்று நாடாள வந்திருப்போருக்கு கண்ணியத்தைக் கற்றுத் தர வேண்டியதும் நம் பொறுப்பு! இவர்களுக்கு ஜனநாயகத்தைச் சொல்லித் தரவேண்டும் — மக்களின் சக்தியை எடுத்துக் காட்டவேண்டும் — இன்னும் ஆளத்தெரியாத இவர்களுக்கு ஆட்சிமுறையை பயிற்றுவிக்கவேண்டும் — அடக்குமுறையினால் அழிந்துபோனவர்களின் பட்டியலைக்காட்டவேண்டும் — நமக்கு ஏராளமான பொறுப்புகள் உள்ளன.

### பலாத்காரமில்லை!

பலாத்கார வேலைகளில் நம்மால் ஈடுபட முடியும். ஆனால் அந்தப் பாதையிலே நடக்கத் துடிக்கும் மக்களை நாம்தான் தடுத்துவைத்திருக்கிறோம். அன்று பிரஞ்சு நாட்டிலே நடந்த புரட்சியின் கடைசி அத்தியாயம் இங்கு நடைபெறாமல் குறுக்கில் நிற்பது நாம்தான். அதற்காக இந்த சர்க்கார் நமக்கு நன்றி செலுத்தவேண்டும்.

வயிற்றுக்கே இல்லையென்று கதறிடும் மக்கள் வாளாயிருக்கின்றனர். ஏன்? கலகங்கள் செய்ய முடியாதா? நாம் தடுத்துவைத்துள்ளோம். உலக உத்தமர் காந்தியார் ஒரு பார்ப்பனரால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற சேதி கேட்டதும் உலகமே நிலை குலைந்தது. அந்தப் பொன்னான சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டிருந்தால் இங்கு கலகம் செய்து, இந்த நாட்டை ஒரு நான்கு தினங்களுக்காவது ஆட்டிவைத்து அக்கிரமம் மிகுந்த அக்கிரகாரத்திலே என்னென்ன செய்திருக்க முடியும்? ஒரு சிறு பலாத்காரச் செயலும் நடைபெற விடவில்லை.

ஆனால் மராட்டியத்திலே அக்கிரகாரங்களில் தீயிட்டனரே! அங்கே அண்ணா இல்லை, பெரியார் இல்லை — நம் இயக்கம் பரவாத பூமி— இருந்தும் ஏற்பட்டதே! ஆகவே நாம் பலாத்காரத்தை வெறுக்கிறோம் என்பது இந்த சர்க்காருக்கு விளங்கவேண்டும்.

நாம் அநீதிகளை அமைதியான முறையில் எடுத்துச் சொல்கிறோம். அவர்களோ, கலகத்தால் காரியம் சாதிக்கலாம் என்று நாட்டோருக்கு பாடம் சொல்லிக் கொடுத்தவர்கள் என்பதை நினைவில் நிறுத்துங்கள். நாங்கள் மாணவர்களை தந்திக் கம்பிகளை அறுத்தெறியுங்கள், தபால் நிலையங்களைக் கொளுத்தித் தள்ளுங்கள், தண்டவாளங்களை பெயர்த்திடுங்கள் என்று தூண்டிவிட்டதில்லை — தூபமிட்டதில்லை! இன்றோ அவர்கள் உபதேசம் செய்கிறார்கள் மாணவர்களுக்கு, இதையாவது செய்யமாட்டார்களா என்ற நைப்பாசையால்!

### வசதி இல்லை

நமக்குப் பிரச்சார வசதி இல்லை. பத்திரிகை பலமும் கிடையாது. இருந்தும் நம்மிடம் மக்கள் ஏராளம் வருகிறார்கள். நம்முடைய பேச்சால் பத்துபேர் வருகிறார்கள் என்றால். அவர்களது திறமைக் குறைவால் இருபது பேர் வருகிறார்கள்.

இந்நாட்டு மந்திரிமார்களோ நம்மைப் பற்றி பேசாத நேரமில்லை. இவர்கள் திராவிட இயக்கத்தை எந்த இடத்திலும் கண்டிக்காமலிப்பதில்லை. இவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம், அவரவர்களுக்கு அளித்துள்ள இலாக்காக்களை ஒழுங்காக நிர்வகித்தால் போதும் என்பதுதான். அதையே செய்யாதவர்கள் அவசியமற்ற வேலைகளிலீடுபடுகிறார்கள்!

### அரிசி ஜோதிடம்!

வெள்ளைக்காரர்கள் நம்மை ஆண்டபோது பதினாறு அவுன்ஸ் அரிசி தந்தார்கள். பிறகு குறைய ஆரம்பித்தது. அரிசி ரேஷனையும், ஆளும் ஆண்டுக்கணக்கையும் வைத்து ஒருவரைப் படம் தயார் செய்யுங்கள். பிறகு பாருங்கள். பதினாறு பன்னிரண்டாயிற்று. அது காங்கிரசார் ஆட்சிக்கு வந்து ஓராண்டாயிற்று என்பதைக் காட்டிற்று. பன்னிரண்டு பத்தாயிற்று—ஆட்சிக்கு இவர்கள் வந்து ஒன்றரையாண்டும் முடிந்தது என்று அது கூறிற்று. பத்தும் எட்டாயிற்று—இரண்டாண்டுகள் முடிந்துவிட்டன. என்று சொல்லிற்று. எட்டு பிரதமர் ராஜாவின் அறிக்கையிலே ஏழாகி, கடைகளில் ஆறாகி, வீட்டிற்குவந்து புடைத்துப்பார்த்தால் மூன்று அவுன்ஸ் கல், மூன்று அவுன்ஸ் மண்ணாகிவிட்டது. இது அவர்கள் இருக்கப் போவது இன்னும்கொஞ்சகாலம்தான் என்பதைக் காட்டிற்று!

மேலும்அவர் இந்நாட்டு ஆட்சிப்பொறுப்பேற்றுள்ள மந்திரிமார்களின் போக்கினைப்பலமாகக் கண்டித்துப் பேசினார். தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர் காமராஜரின் அர்த்தமற்ற பேச்சினை எடுத்து விளக்கினார். அவர் முடிவாகக் கூறியதாவது:—

### தயாராயிருங்கள்!

மாணவர்களே, கொடுங்கோலர்கள் தங்களுக்குரிய தண்டனையே ஏற்ற பிறகே மடிந்தார்கள். நீரோமன்னன் கொடுங்கோலன்—அதேநேரத்தில் வீரன், சார்லஸ், பிரஞ்சுநாட்டு லூயி, ரஷ்ய ஜார் இவர்கள் அக்கிரம ஆட்சி நடத்தினார்கள். ஆனால் பெருவீரர்கள் அவர்கள்! அவர்களே தண்டனை பெற்றே மாண்டனர். என்றால் இன்றைய ஆட்சியாளர்கள் வடிகட்டிய கோழைகள்! இவர்கள் எப்படித் தப்பிவிட முடியும்?

இவர்கள் ஆகஸ்ட் புரட்சி செய்ததாகக் கூறுகிறார்கள். அவர்களோ ஆகஸ்ட் கலவரம் என்று அடிக்கடி சொல்லிவிடுகிறார்கள்! மாணவ நண்பர்களே, நீங்கள் வெளியில் வரும்பொழுது இவர்கள் ஆட்சிக்குக்கீழ் உள்ள நாட்டைத்தான் பார்ப்பீர்கள். இப்பொழுதே இவர்களின் வெறிபாட்டங்களை அறிந்திருப்பீர்களானால் வெளியில் வரும் பொழுது பிரமை தட்டாது. சேவா உணர்ச்சியே ஏற்படும் எதிர்கால அரசியல் நிர்வாகப் பொறுப்புகளை ஏற்று நடத்தும் ஆற்றலுடன் வெளியில் வாருங்கள் என்று கூறி என் பேச்சைமுடிக்கிறேன்!!

---


## சேரனின் நூல்கள்

| | |
|---|---|
| கட்டழகி காஞ்சனா | 1 4 0 |

ஒரு ஆடல் அழகியின் அந்தரங்க வாழ்க்கையைச் சித்தரிக்கும் இன்பச் சுவை நிறைந்த நாவல். மது உண்ணும் வண்டுபோல கண்ட கண்ட ஆடவரிடம் எல்லாம் காம லீலை புரிய விரும்பிய காஞ்சனாவின் கதை இன்றைய சமூகத்தில் உள்ள ஒரு புது விதமான காம நோயை விளக்குகிறது.

சேரனின் நடை படிக்கப் படிக்க இன்பம் ஊட்டுவது. காஞ்சனாவின் நடனத் தோற்றம் கொண்ட அழகிய மூவர்ண அட்டையுடன் 128 பக்கங்கள் கொண்டது.

| | |
|---|---|
| கலைக் கோயிலா? விபசார விடுதியா? | 0 4 0 |
| நாடறிந்த நட்சத்திரங்கள் | 0 8 0 |

பிற நூல்கள்

| | |
|---|---|
| லீலாராணி (தணலன்) | 0 8 0 |
| பெண் (இராதாமணாளன்) | 0 8 0 |
| ரஷ்ய பிரச்சினை (ஸ்டாலின் பரிசு பெற்றது) | 1 4 0 |
| மாசேதுங் (சீனப் பிரதமரின் சரித்திரம்) | 0 8 0 |

அச்சில்

| | |
|---|---|
| மனப்போர் (தில்லை வில்லாளன்) | 1 0 0 |
| அறிஞர் அண்ணாத்துரை (தொகுப்பு நூல்) | 1 0 0 |
| அண்ணாவின் வாழ்க்கைக் குறிப்புகள் (பழமநீ) | 0 6 0 |

குறிப்பு:— விற்பனையாளர்களுக்கு 20% கழிவு உண்டு. அனுப்பும் செலவு இலவசம்.

பாரி நிலையம்
59, பிராட்வே சென்னை 1.

# சிங்க இளைஞனே, திருப்பு முகம்!

## "கேள்விக் குறியை அபாயக்குறியாக்காதே!"

## ஆளவந்தாருக்கு எச்சரிக்கை

### ராஜாஜி மண்டபம் ஒரு கட்சி சொத்தா?

### மாணவரிடையே நெடுஞ்செழியன்



சென்னையில் 8—11—50-ல் கூடிய திராவிட மாணவ முன்னேற்றக் கழக முதல் மாநாட்டில், மாலை 7 மணிக்குதோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ அவர்கள் பேசினர். அவர் பேச்சின் சுருக்கம் இங்கு தரப்பட்டுள்ளது.

**அபாயக்குறியாக்காதே!**

திராவிட மாணவர் இயக்கத்தின் வளர்ச்சிக் காலம் மிகக் குறைவு—1944-ல் குடந்தையிலே உருவெடுத்து, 1950-ல் சென்னையிலே இந்தப் பெருமாநாடாக வளர்ந்திருக்கிறது, இந்த மாணவ இயக்கம் 1944-ல் 'கமா'வாக இருந்து, 1945-ல் 'செமிகோல'னாகி, பிறகு 1946-ல 'கோல'னாகி, 1947-ல் 'முற்றுப் புள்ளி'யாகி, 1948-ல் 'ஆச்சரியக் குறி'யாக மாறி, 1949-ல் எச்சரிக்கையாகி, 1950-ல் 'கேள்விக்குறி'யாக நாட்டின்முன் நடமாடுகிறது. இதனை இந்த சர்க்கார் அபாயக்குறியாக்கிவிடக்கூடாது என்பதே எங்கள் வேண்டுகோள்.

**புதிய பாடம்**

திராவிட மாணவ அணி வகுப்பு, எங்கள் இயக்கத்தின் நிழலிலே தங்கிடக் கூடுகிறார்கள். பள்ளிகளிலே அவர்களுக்குச் சொல்லித் தர மறுத்த பாடங்களை, விடுபட்டுப்போன பாடங்களை இங்கே சொல்லித் தருகிறோம், அப்படிக் கற்பிப்பதால் அவர்கள் கெட்டுவிட்டார்கள் என்று பழி தூற்றத் தேவையில்லை. திராவிட மாணவர்கள் கெட்டுப்போகிறார்கள் என்றால், அது, அவர்கள் பயிலும்புராண இதிகாச கதைகளாலிருக்கலாம் எங்களால் அல்ல!

சாதி மத பேதங்கள் ஒழியவேண்டும் என்று சொல்லித் தருகிறோம். பொருளாதார பேதம் நீங்கி, சக்திக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற வசதி என்ற தத்துவத்தைப் போதிக்கிறோம்,

**அலங்கார நடை**

இத்தனையும் எடுத்து விளக்கும் ஒரு குரல் கேட்டது, அது நம் அண்ணாவின் இனிய குரல் தான்! நம் சிந்தனை விழித்துக்கொண்டது. அவரின்பின் வந்து நின்றோம்.

அலங்கார நடையைக் கண்டு நாம் மயங்கிவிடவில்லை. அலங்கார நடையில் பேசுவதும், எழுதுவதும்— ஆற்றலின் விளைவு. எல்லோருக்கும் வந்துவிடக்கூடியதல்ல. அலங்கார நடையிருந்தால்மட்டும் போதுமா? அலங்கார நடைதான்—ஆனால் அர்த்தபுஷ்டியோடிருக்கிறது. அதனால்தான் மக்கள் விரும்புகின்றனர். அலங்கார நடை, அறிவு நிரம்பிய கருத்துகள். ஆற்றலும், நிரம்பிய கருத்துகள். ஆற்றலும், அறிவும் கைகோத்து நிற்கின்றன.

அலங்கார நடையிருப்பதால்மட்டும் மக்களின் ஆதரவு திரட்டிவிடமுடியுமா? கம்ப ராமாயணப் பிரசங்கிகூட அடுக்குச்சொல் அழகோடு பேசுகிறான். கிருபானந்தவாரியார்கூடத்தான்—மக்கள் ஏன் மதிப்பதில்லை? நம்மிடம் உண்மை, நேர்மை, ஒழுங்கு, அறிவு, ஆற்றல், தூய்மை, இலட்சியம், எல்லாம் இருப்பதால், மக்கள் வருகின்றனர். அலங்கார நடையில் மயங்கியல்ல!

அப்படி வருகிற மாணவர்களுக்கு நேரடி நடவடிக்கைகளில் இடந்தரோம். அதற்கு நாங்கள் ஆயிரக்கணக்கிலிருக்கிறோம். எங்களால் சமாளிக்க முடியாதநிலை ஏற்பட்டாலல்லவா, இவர்கள் துணையை நாடவேண்டும்? எங்களுக்குத் தெரியும், எதிர்காலத்திற்கு நாடாளுந் திறம் படைத்த நல்லறிவாளர்கள் ஏராளம் தேவையென்று. ஆகவே, பள்ளிகளில், கல்லூரிகளிலிருக்கும் காளைகளை, படிப்பைப் பாழாக்கிக்கொண்டு வெளியில் வரும்படி அழைக்கவில்லை.

அவர்களுக்கு புதிய பாடல்களைமட்டுந்தான் சொல்லிவருகிறோம். புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபடச் சொல்லவில்லை.

**நம் கொடி!**

நாம் அரசியலில் வடநாட்டிற்கு அடிமை, பொருளியலில் வடநாட்டு முதலாளிமார்களுக்கு அடிமை, சமுதாயத்தில் நம் உரிமை வைதீகத்தால், மௌடீகத்தால பறிக்கப்படுகின்றன. இந்த நிலையைத்தான் நம் கொடியிலே கருப்பாகக் காட்டியுள்ளோம். இந்த இருளை விரட்டிட நாம் செய்து வருகிறோம் அறிவுப் பிரச்சாரம். அதுதான், காலைக்கதிரவனின் செங்கதிர்களாக சிவப்புருவில் அமைந்துள்ளது;

இன்னுங் கூறப்போனால், இந்த உலகமே நம் கொடிக்குள் அடக்கம் — எப்பொழுதும் பாதி இருள்—பாதி ஒளிதானே! நாமும் இழிவு ஒழிக, புரட்சி ஓங்குக என்றுதான் முழங்கி வருகிறோம்.

**குறுகிய நோக்கமா!**

நம் நாட்டைக் கேட்பது குறுகிய நோக்கம் என்று, இந்த 'பரந்த' மனப்பான்மையினர் கூறுகின்றனர்.

இந்த உலகில் 260 கோடி மக்கள் வாழ்கிறார்கள். இங்கு 90 நாடுகளுள்ளன. ஒரு கோடி இரண்டுகோடி மக்கள் கொண்ட நாடுகளுள்ளன. பத்து இலட்சம், இருபது இலட்சம் ஜனத்தொகை கொண்ட நாடுகள் உள்ளன.

நாம், நாம் இழந்த நாட்டைக் கேட்கிறோம், வாழ்ந்த நாட்டைக் கேட்கிறோம், ஆறுகோடி மக்களைக் கொண்ட திராவிடத்தைக் கேட்கிறோம். வற்றாத ஆறுகளும், வளமான வயல்களும், வெட்ட வெட்ட வேண செல்வங்களைத் தரும் சுரங்கங்கள் நிரம்பிய நாட்டைக் கேட்கிறோம். இது குறுகிய நோக்கமாம்—கூறுகிறார்கள் அவர்கள்.

**ராஜாஜி மண்டபம்**

சென்னையைப் பொறுத்தமட்டில், கூட்டங் கூடும் இடங்களுக்கும் தடைபோட்டு விட்டார்கள். ஐலண்ட் கிரவுண்ட்ஸ் தரமுடியாது என்று விட்டனர். கடற்கரையிலும் மறுத்து விட்டனர். ராஜாஜி மண்டபம் என்பது சர்க்காருக்கு சொந்தமானது. அதனைப் பொதுப்பணிக்குப் பயன்படுத்துவதாகச் சொல்கிறார்கள். எனினும் நமக்கு மட்டுந் தருவதில்லை. நாம் வரி செலுத்துகிறோம். நாமும் இந்நாட்டு குடிமக்கள்தான். இருந்தும் ஒரு கட்சியார் அனுபவிக்கும் உரிமையை நாம் அனுபவிக்க மறுக்கப்படுகிறோம். இதுதான் ஜனநாயகமா?" என்று பேசினர். கடைசியாக,

**நீங்கள்தான்!**

மாணவர்களே, நம் நாடு எல்லா வளங்களும் நிறைந்த நாடு — ஜப்பானைப்போல எரிமலைகள் இங்கு கிடையாது. சஹாரா பாலைவனங்களும் கிடையாது. ரஷ்யாவிலே உள்ளது போல பனிப்பாறைகளும் இல்லை. இங்கிலாந்துபோல சுண்ணாம்பும், நிலக்கரி மட்டுமே நம் சுரங்கப்பொருள்களல்ல! தங்கம் விளையும் தரணி—அதுதான் நாம் பிறந்த திராவிடம். இங்கு பூகம்பம் ஏற்பட முடியாது—ஏனெனில் நம் பூமி கற்பாறைகளாலானது. இங்கு அடிக்கும் வீசும்காற்றும் தென்றல் தான்—வாடைக்காற்றுகூட வடக்கிலிருந்து வருவது. அதற்கு கதவடைப்பதுபோல வடநாட்டு ஆதிக்கத்தினை எதிர்த்துப் போரிட வாரீர் என்று கூறி புரட்சிக்கவிஞரின் 'பூட்டிய இரும்புக் கூட்டின்' என்ற பாடலோடு தன் பேச்சை முடித்தார்.

—※—

## கே. வி கே. சாமி மீது அடக்குமுறை

## தி. மு. க. பொதுக்கூட்டம்

**தூத்துக்குடியில் கண்டனம்**

5—10—50 அன்று ஆளவந்தார் அடக்குமுறையைக் கண்டித்து தோழர் எஸ். எஸ் ராஜன் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் இரா சு தங்கப்பழம், M S சிவசாமி, M இரத்தினம் ஆகியோர் பேசினர்.

அதுபோது, தூத்துக்குடி உப்புத் தொழிலாளர் சங்கத் தலைவர் K. V. K. சாமிமீது சில வழக்குகள் இருப்பதாகக் காரணம் காட்டி நகருக்குள் வரக் கூடாது என்று தடையுத்திரவு பிறப்பித்திருப்பதைக் கண்டித்தும், அவர் எப்போதும் போல நகருக்குள் வந்து செல்ல அனுமதிக்குமாறு நகர போலீஸ் அதிகாரிகளைக் கேட்டுக்கொள்வதாகவும் ஒரு தீர்மானம் நிறைவேறியது. (கி)

10-ம் பக்கத் தொடர்ச்சி

மாநாடு வற்புறுத்தவேண்டும். விலைவாசிகளின் காரணமாய் நெருக்கடி ஏற்பட்டுள்ள நேரத்தில் கண்ணியமானதொழிலாகிய ஆசிரியத்தொழிலிலே உள்ள நமது ஆசிரியர்களின் சம்பளநிலை நமது அனுதாபத்திற்கு உரியதாய் உள்ளது. அவர்களின் சம்பளம் அதிகரிக்கப் படவேண்டும். அதே நேரத்தில் மாணவர்களிடம் வசூலிக்கும் உயர்ந்த தொகையைக் குறைக்கவேண்டும். ஏற்கெனவே நமக்கிருந்த கல்வித்திட்டம் ஒரு ஏகாதிபத்யம் தனக்கு ஏவலாட்களைத் தயாரிக்கச் செய்திருந்த ஏற்பாடு. அந்த உளுத்துப்போன திட்டத்திற்கும் கீழானதாக ஆதாரக்கல்வி என்பதன் பேரால் அர்த்தமற்ற முறையில் அனுவசியமாக கல்வியின் பேரால் நாட்டு வரிப்பணத்தை அரசாங்கம் வீணாக்குகிறது இவைகளைத் தலைமுழுகி நல்ல அறிஞர் பெருமக்களை, மதிவாணர்களைக் கொண்டு பகுத்தறிவு விஞ்ஞானம், ஆகிய அடிப்படைமீது நல்லதொரு கல்வித் திட்டத்தை சர்க்கார் உருவாக்கவேண்டும். இவைகளைப் பற்றியெல்லாம மாநாடு சிந்திக்கும் என எதிர்பார்க்கிறேன். இறுதியாக, எனது அருமை நண்பர்களே! நாம் ஒரு புதுயுகத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். அதன் சிற்பிகள் நீங்கள் பூத்துவரும் மறுமலர்ச்சி இயக்கத்தின் தூதுவர்கள். உங்கள் உழைப்பால், அறிவால் தியாகத்தால் இந்நாடு விடுதலையை, முன்னேற்றத்தை, புது வாழ்வைப் பெறப்போகிறது. நீங்கள் வெறும் டாக்டர்களாய் இராதீர்கள்! சமுதாயத்திலே இருக்கும் முடக்கு வாதநோயாகிய மூடநம்பிக்கைகளை நீக்கும் டாக்டர்களாகுங்கள், வெறும் இன்சினியர்களாகவேண்டாம். நமது சமுதாயம் வாழ புதியதோர் கட்டிடம்,-மாளிகை ஆக்கித்தரும் இன்சினியர்களாகுங்கள்.

வெறும் வக்கீல்களாகவேண்டாம்—அநீதிக்கு அக்ரமத்திற்கு, கொடுமைக்கு எதிராக போராடும் வீரராக, சமுதாய முன்னேற்றத்திற்கான வழக்கு மன்றத்திலே பேசும் அறிஞர்களாகுங்கள்.

வெறும் புலவராகவேண்டாம். இலக்கியத்திலே புதுமலர் பயிர்செய்யும் தோட்டக்காரர் ஆகுங்கள். நமது இலட்சியம் தோல்வியடையாது. ஏனென்றால் மாசற்றது. உண்மை, நேர்மை, நியாயம் ஆகியவையின் அடிப்படையில் அமைந்தது. ஆகவே வெற்றி நிச்சயம்!

Edited Printed & Published by C. N. Annadurai M. A at "Dravida Nadu" Press 95, Tirukkachinambi Street Kancheepuram